விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 10 வியாழக்கிழமை (27.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 251

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சாத்தியமற்றுப் போகும் சர்வதேச விசாரணை

## உள்ளகப் பொறிமுறைக்கு அமெரிக்கா ஆதரவு



(கொழும்பு)

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு போதிய கால அவகாசம் வழங்கக் கோரும் தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டு வரவுள்ளதாக தெரிவித்துள்ள அந்நாட்டின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கையின் உள் நாட்டு விசாரணைகளுக்கு ஆதரவளிக்க போவதாகவும் தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாந்தைப் பகுதியில்

## மனித புதைகுழி உள்ளதாக கூறப்பட்ட கிணறு கண்டுபிடிப்பு



(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றுக் காலை மன்னார் நீதவான் நீதி மன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

மன்னார் நீதவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட குறித்த விசாரணைகளின் போது, காணாமல் போனவர்கள் சார்பாக சட்டத்தரணிகளான வீ.எஸ்.நிரஞ்சன் மற்றும் ரணிதா ஞானராஜா ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் சார்பாக மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பாக

24 ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றத் தாக்குதல் 4 பேருக்கு பிணை

(கொழும்பு)

யாழ் நீதிமன்ற கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 29 சந்தேக நபர்களில் 4 பேரை 5 லட்சம் ரூபாய் பெறுமதியுடைய 3 ஆட்பிணையில் செல்லுமாறும் ஏனையவர்களை எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி ப.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து கடந்த மே

24 ஆம் பக்கம் பார்க்க....

## மூன்று மாத காலப் பகுதிக்குள் அரசியலிலிருந்து ஓய்வு - மகிந்த

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று மாத காலங்களுக்குள் அரசியலிலிருந்து ஓய்வு பெற போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



தமது இரண்டு சகோதரிகளின் ஆலோசனையின் பேரில் தாம் இந்த முடிவை எடுத்ததாக, அண்மையில ஜனாதிபதி மைத்திரியை சந்தித்த போது இவர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் தோல்வியையடுத்து அரசியலிலிருந்து ஓய்வுபெறப்

24 ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அமைச்சரவை செப்டெம்பர் 2 இல்

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்ரமசிங்க நேற்று இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை, கடந்த திங்கட்கிழமை பதவியேற்று, நேற்று முதலாவது அமைச்சரவையை கூட்டுவதற்கு தீர்மானம்

24 ஆம் பக்கம் பார்க்க...

## த.தே.கூட்டமைப்பினருடன் நிஷா பிஸ்வால் சந்திப்பு!

### அரசுடன் இணைந்து பணியாற்ற வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதி

24 ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய அரசில் ஈ.பி.டி.பி!

(யாழ்ப்பாணம்)

கடந்த 17 ஆம் திகதி இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப்பின்னர் அமையவுள்ள தேசிய அரசாங்கத்தில் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியும் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது.

ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

23 ஆம் பக்கம் பார்க்க....

## ரயில் மோதி ஒருவர் பலி

(புன்னாலைக்கட்டுவன்)

ரயில் மோதியதில் குடும் பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் மல்லாகம் கோட்டைக்காடு மதவடிப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரத்தில் மோதுண்ட ஜெயராசா (வயது 57)

24 ஆம் பக்கம் பார்க்க....



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா கொலைச் சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகள் மீளவும் பரிசோதனை

## ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலைச்சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளை மீளவும் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய வைத்திய அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ள ஊர்காவற்துறை நீதவான் எஸ்.லெனின்குமார்,

குறித்த வழக்கு விசாரணைகள் தாமதமாகுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மன்றில் தெரிவித்துள்ளார். புங்குடுதீவு பாடசாலை மாணவியொருவர் கூட்டுவன்புணர்வின் பின்னர் புங்குடுதீவில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இப்படுகொலையில் சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்துறை நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில் சந்தேக நபர்கள் தொடர்பிலான மரபணு பரிசோதனைகளும் நடைபெற்றிருந்தன.

கடந்த வழக்கு தவணையின் போது 2-ம், 4-ம்,5-ம்,6-ம் சந்தேகநபர்கள் மேற்படி மாணவியை வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்வதற்கான திட்டத்தை தீட்டியிருந்ததாகவும், 2-ம், 3-ம், 5-ம், 6-ம் சந்தேக நபர்கள் மேற்படி குற்றத்துடன் தொடர்புபட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியதுடன், கடற்படையினருக்கு அபகீர்த்தியை உண்டாக்கும் வகையிலேயே வித்தியாவின் சடலத்தை சடலம் மீட்கப்பட்ட பகுதியில் விட்டதாகவும் தகவல பெற்றிருப்பதாக மன்றில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதேவேளை 4-ம் சந்தேக நபரிடம் இருந்த வித்தியாவின் கண்ணாடி தொடர்பாக குறித்த கண்ணாடியை தான் கடையில் வாங்கியதாக மன்றில் சந்தேகநபர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து எதிர்வரும் 26-ம் திகதி கண்ணாடியை மன்றுககு கொண்டுவருமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் சந்தேகநபர்கள் தமக்கு பிணை வழங்குமாறு நீதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்போது தம்மால் பிணை வழங்க முடியாது என தெரிவித்த நீதிபதி மேல்நீதிமன்றத்தினாலேயே பிணை வழங்க முடியும் என தெரிவித்துள்ளார். மேலும் சட்டத்தரணிகள் ஊடாகவே மன்றில் பேச முடியும். எனவே சட்டத்தரணிகளை ஒழுங்குபடுத்துமாறு நீதிபதி சந்தேகநபர்களுக்கு கூறிய நிலையி[illegible]ள்ளனர். அவ்வாறு சட்டத்தரணிகளை தாங்கள் அணுகிய போதும் அவர்கள் உடன்படவில்லை என மன்றுக்கு சந்தேகநபர்கள் தெரியப்படுத்தி இருந்தனர்.

மேலும் சந்தேகநபர்கள் மரபணு (டீ.என். ஏ) பரிசோதனையினை மீண்டும் ஒருமுறை மேற்கொள்ளுமாறு நீதிபதியிடம் மன்றில் வைத்து கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் எதிர்வரும் 26-ம் திகதி வரையில் 14 நாட்கள் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்துறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இன்றைய தினமே (நேற்றைய தினம்) சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளை பெற்றுக் கொள்ளுமாறும், ஏற்கெனவே நீதிமன்றால் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்துக்கு பாரப்படுத்தப்பட்ட இரத்த மாதிரிகளை நீதிமன்றின் மறு அறிவித்தல் வரும் வரை பாதுகாப்பாக வைத்திருக்கும்படி திணைக்கள பணிப்பாளருக்கு நீதவான் கட்டளை இட்டுள்ளார்.

மேலும் குறித்த வழக்கு மீண்டும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (செ-4)


## தேவை

★ சமையல் உதவியாளர்

(நேரில் வெள்ளி காலை 10.00 மணிக்கு வரவும்)

கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரண்ட்

(ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்ப்பாணம்)

T.P 0777404883 (1321)

## ஸ்ரீஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திகா



பிருந்தாவனம் - நல்லூர் - யாழ்ப்பாணம்

344 வது வருட பிருந்தாவன பிரவேச ஆராதனை

காலம் 27.08.2015 தொடக்கம் 01.09.2015 வரை

27, 28, 29 :மாலை 3.30 ஆன்மீக சொற்பொழிவு
சித்தானந்தரத்தினம் சிவநெறிசெல்வர்
செல்வி ஐயாதுரை -மனோரா

28.08.2015 :இரவு 7.00 சமர்ப்பணம் ஓய்வு நிலை- உதவிக்கல்விப்பணிப்பாளர்
அழகியல் தீவ்கம் திருமதி அன்னலஷ்மி தனபாலசிங்கம்

29.08.2015 :இரவு 7.00 பாட்டு திருமதி கிருபாசக்தி கருணா
மிருதங்கம் திரு.வ.ரமணா
வயலின் திரு.கா.குகபரன்

30.08.2015 :4.30 பஜனை பொன்னாலை வரதராஜப்பெருமாள்
தேவஸ்தான பஜனைக்குழு
7.00 வீணை இசை சமர்ப்பணம் கலாவித்தகர்
: திருமதி உமாகாந்தன் குமுதா
மிருதங்கம் எஸ். துரைராஜா

31.08.2015 :மாலை 3.00 மணி பிருந்தாவன பிரவேசம் கதவு சாத்துதல்

01.09.2015 :அபிஷேக ஆராதனை மகேஸ்வர பூஜை (1594)

363, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தர்மகர்த்தா
திருமதி சிவசிதம்பரம் சசிதேவி
குடும்பம்.

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

இவ் வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் நேரில் சமுகம் தரவும். (C-1931)

தொடர்புகளுக்கு :- ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் காணி விற்பனைக்கு உண்டு. (1593)

தொடர்புகளுக்கு
0778730129


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2012

1. இசைமாணி / நடனமாணி - முதலாம் வருடத் தேர்வு
2. இசைமாணி / நடனமாணி - இரண்டாம் வருடத் தேர்வு
3. இசைமாணி / நடனமாணி - மூன்றாம் வருடத் தேர்வு
4. இசைமாணி / நடனமாணி - நான்காம் வருடத் தேர்வு

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன். இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபாய் 300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபாய் 300/= க்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை, சுயமுகவரியிடப்பட்ட ரூபாய் 70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை www.jfn.ac.lk/codl எனும் இணையத்தள முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 02.10. 2015 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

குறிப்பு : இசைமாணி மற்றும் நடனமாணி கற்கைநெறி தொடர்பாக விரைவில் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதால், ஏற்கெனவே பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
24.08.2015 (சி-1930)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி

### சிவனேஸ்வரி பிறேமச்சந்திரன்

எமது அன்புக்குரிய நண்பர் ஆ.பிறேமச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவி திருமதி சிவனேஸ்வரி பிறேமச்சந்திரன் அவர்கள் லண்டனில் காலமாகிய செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வலம்புரி நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு அழுத்தம் காரணமாகவே பதவியை இராஜினாமா செய்தேன்

## சுசில் பிரேம ஜயந்த விளக்கம்

(கொழும்பு)

**பல்வேறு அழுத்தம் காரணமாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்து கொண்டதாக முன்னணியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**



சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

ஜனாதிபதி என்னை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கிய சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக முன்னணியின் ஏனைய தரப்பினர் நீதிமன்றம் முன் செல்வதற்கான வாய்ப்புகள் காணப்பட்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்ட 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதியில் இருந்து இதுவரையில் முன்னணியின் பொதுச் செயலாளராக ஜனாதிபதி தேர்தல், பொது தேர்தல், மாகாண சபைகள் மற்றும உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் என அனைத்திற்கும் வேட்புமனு பட்டியல் தயாரித்த மற்றும் தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் என்னால் மேற்கொள்ளப்பட்டன.


ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்கு கட்சிகளின் பிரதிநிதிகள் விடயங்களை சரியாக புரிந்து கொள்ளாமல் மக்களை தவறான வழியில் கொண்டு செல்லும் ஊடக அறிக்கைகளை வெளியிடுகின்-றமையினால் நான் பல்வேறு அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

ஒரு பக்கத்தில் முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கியுள்ளனர். மற்றைய பக்கத்தில் முன்னணியின் பங்கு கட்சிகள் என்னை பல்வேறு வகையில் விமர்சனம் செய்கின்றார்கள்.

அதனால் என்னால் இரண்டையும் செய்ய முடியாதல்லவா, இவ்வாறான அழுத்தங்களே நான் இராஜினாமா செய்து கொள்வதற்கு காரணம் என் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிங்களவர்களை வெளியேற்றிவிட்டு பிரபாகரன் சிலை அமைக்க வடக்கில் புதிய நடவடிக்கை

பிரபாகரனின் சிலை அமைக்கப்படவேண்டுமென்பதற்காக வடக்கிலிருந்து இன்று சிங்களவர்கள் வெளியேற்றப்படுகின்றனர் எனத் தெரிவித்த பியகம சுசில தேரர், தூங்கிக் கொண்டிருக்கும் சிங்கத்தை தட்டியெழுப்ப வேண்டாம் என நான் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறேன் என்றும் தெரிவித்தார்.



பிட்டகொட்டே பாகொட வீதியில் தூய்மையான ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அதன் ஆலோசகர் பியகம சுசில தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

தேரர் இங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடக்கிலுள்ள ஹசாக காமினி என்ற நாட்டுக்காக உயிர் நீத்த சிங்கள இளைஞனின் சிலை உடைக்கப்பட வேண்டும். இராணுவ நினைவுச் சின்னாங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

இதன் மூலம் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என நல்லாட்சிக்காக குரல் கொடுத்த பௌத்த குருமார் மற்றும் சிவில் அமைப்பினர் இன்று வடக்கில் பிரபாகரனின் சிலை நிறுவ வேண்டும் என்ற விஜயகலா மகேஸ்வரனின் கனவை நனவாக்குவதற்காக அங்கிருந்து சிங்களவர்கள் வெளியேற்ற வேண்டும் என்கின்றனர். நாக விகாரைக்கு போகும் சிங்களவர்கள் தாக்கப்படுகின்றனர். இது தொடர்பில் நல்லாட்சிக்கு குரல் கொடுத்தவர்கள் சொல்லும் பதில் என்ன? இதுவா நல்லாட்சி?

ஜனவரி மாதம் 8ஆம் திகதி வெளிநாட்டு சதிகாரர்கள் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை தடுத்தார்கள் இன்று மகிந்தவின் வெற்றியை ஜனாதிபதி மைத்திரிபால தடுத்துள்ளார்.

வடக்கிலிருந்து சிங்களவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். ஆனால் அதனை வெளியில் தெரியாமல் அரசு மூடி மறைக்கின்றது.

நாய்க்கு கல்லடித்தால் அது குரைக்கும் சிங்கத்திற்கு கல்லடித்தால் அது சீறும் எனவே தூங்கிக் கொண்டிருக்கும் சிங்கத்தை தட்டியெழுப்ப வேண்டாம் எழுப்பினால் விளைவுகள் விபரீதமாகும்.

இந்த ஆட்சியை முன்னெடுக்க இடமளிக்க மாட்டோம் என்றும் தேரர் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த, மகேந்திரன், கப்ரால் மோசடி வழக்குகள் வாபஸ்

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கு எதிரான மூன்று வழக்குகளை வாபஸ் பெற மனுதாரர்கள் தரப்பில் நேற்று முந்தினம் நீதிமன்றத்தின் அனுமதி கோரப்பட்டது. இதன்படி இன்று 27 ஆம் திகதி வழக்குகளை வாபஸ் பெறுவது தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்ற முடிவு அறிவிக்கப்பட உள்ளது. மத்திய வங்கி, திறைசேரி முறி விநியோகத்தில் முறைகேடு இடம்பெற்றதாக கூறி மத்திய வங்கி ஆளுநருக்கும் அவரின் மருமகனுக்கும் எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இது தவிர அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படும் வகையில் நிதி தொடர்பான முடிவுகள் எடுத்ததாக முன்னாள் ஜனாதிபதிக்கும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநருக்கும் எதிராக இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இவை தொடர்பான மனுக்கள் மீதான விசாரணை நேற்று முந்தினம் இடம்பெற்ற போது அவற்றை வாபஸ்பெற மனுதாரர்களின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தை கோரினர். இது தொடர்பில் ஆராய்ந்து 27 ஆம் திகதி முடிவு அறிவிப்பதாக கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டிய அறிவித்தார். (இ-7)

# தேசிய அரசாங்கத்தில் பாரிய அமைச்சரவை

## சோபித தேரர் விமர்சனம்

சமூக நீதிக்கான இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர், தேசிய அரசாங்கத்தில் அதிகளவான அமைச்சர்கள் நியமிக்கப்படுவதை கடுமையாக விமர்சித்துள்ளார். தேசிய அரசாங்கத்தில் அதிகள வான அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றமையானது, வெறுமனே நகைச்சுவையாகவே அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் செய்த தவறை மைத்திரிபால செய்யமாட்டார் எனறு நம்புவதாக தேரர் குறிப் பிட்டுள்ளார்.


தற்போதைய நிலைமையை பார்க்கும்போது நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேரும் அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என்று தோன்றுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றன.

எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஜேவிபியும் இதற்கு ஆதரவு வழங்கவில்லை எனில் அது எவ்வாறு தேசிய அரசாங்கமாக இருக்க முடியும் எனவும் சோபித தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தநிலையில் பொதுத் தேர்தலில் பெருமளவான ஆசனங்களை வெற்றி கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி விரும்பியவர்களை சேர்த்துக் கொண்டு சிறிய பெரும்பான்மையுடன் ஆட்சியை நடத்திச் செல்லலாம் என்று சோபித தேரர் ஆலோசனை கூறியுள்ளார். (இ-7)

# பிரதமர் ரணில் சர்வாதிகாரி!



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுமையான சர்வாதிகாரி என்ற போதிலும் கட்சிக்காக உழைத்தவர் என வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். ரணில் தரப்பு எதிர்பார்க்கும் வகையில் நாட்டை ஆட்சி செய்ய முடியாது. வால் தலையை வழிநடத்தும் நிலைமையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. எந்த சந்தர்ப்பத்திலும் அமைச்சுப் பதவிகளை துரத்திச் செல்லப் போவதில்லை.

நான் எடுக்க வேண்டிய தீர்மானம் குறித்து குருநாகல் மாவட்ட மக்களிடம் கேட்டறிந்து கொள்வேன்.

கல்வி, பொருளாதாரம் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளுக்கு எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே ஒத்துழைப்பு வழங்க முடியும்.

நல்ல திட்டங்களுக்கு முழுமையாக ஆதரவளிக்கப்படும். ஊழல், மோசடிகள், குற்றச் செயல்கள் சமூக விரோத செயற்பாடுகளுக்கு நாடாளுமன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் குரல் எழுப்பப்படும் என தயாசிறி ஜயசேகர கொழும்பு ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-7)

# அரச சேவையில் 5500 பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளத் தீர்மானம்

(கொழும்பு)

அரச சேவையில் புதிதாக 5ஆயிரத்து 500 பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த வருடம் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது பல்வேறு காரணங்களால் நியமனம் கிடைக்காத பட்டதாரிகளுக்கு இம்முறை வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார். தொழில் நியமனம் கிடைக்காதவர்கள் முன்வைத்திருந்த மேன்முறையீடுகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய தெரிவு செய் யப்பட்ட பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாடாளுமன்றின் முதல் அமர்வில் ஜனாதிபதி மைத்திரி விசேட உரை

புதிய நாடாளுமன்றின் முதல் அமர்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி எட்டாவது நாடாளுமன்றின் முதல் அமர்வு ஆரம்பமாகவுள்ளது.

இந்த அமர்வுகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்கேற்கவுள்ளார்.

இதில் புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தவுள்ளார்.



எட்டாவது நாடாளுமன்றின் முதல் அமர்வு முதலாம் திகதி 9.30 மணியளவில் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது நிகழ்வாக சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது.

பிரதி சபாநாயகர், அவைத் தலைவர், ஆளும் கட்சியின் பிரதம கொறடா, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் உள்ளிட்டவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதன் பின்னர் புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் ஜனாதிபதி உரையாற்றவுமள்ளார் என நாடாளுமன்றின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து அணியை வீழ்த்தி தொடரை வென்றது தென்னாபிரிக்கா


டி வில்லியர்ஸ்

டி வில்லியர்ஸின் துடுப்பாட்டமும், வேகப்பந்து வீச்சாளர்களின் அசத்தலான பந்துவீச்சும் கைகொடுக்க நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தென்னாபிரிக்க - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி டேர்பன் கிங்ஸ்மீட்டில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியல் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு மோர்னி வான் விக் (58), ஹசிம் அம்லா (44), டி வில்லியர்ஸ் (64), டேவிட் மில்லர் (36) ஆகியோரின் துடுப்பாட்டம் கைகொடுக்க,

50 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் பென் வீலர் 3, எலியட் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

284 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி நியூசிலாந்து அணியால் 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் லதம் 54, வில்லியம்ஸன் 39 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் வீஸ் 3, ரபாடா, தாஹீர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அணித் தலைவர் டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), போட்டித் தொடரின் நாயகனாக ஹசிம் அம்லா (தென் னாபிரிக்கா) தெரிவாகினர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (க)


பிரஸ்வெல் பந்துவீசிய பின்

## ஆசியுடனான ஒருநாள் தொடர்
# ஜோ ரூட்டுக்கு ஓய்வு


ஜோ ரூட்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில், ஆஷஸ் தொடரில் கலக்கிய இங்கிலாந்தின் ஜோ ரூட்டுக்கு ஓய்வு அளிக்கப் பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டி நடைபெறவுள்ளது. இதற்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்,

முன்னணி வீரர் ஜோ ரூட்டுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. 20 ஓவர் ஆட்டத்திலும் அவர் விளையாடவில்லை. நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரில் 460 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

மொய்ன் அலி, வோக்ஸ் ஆகியோர ஒருநாள் தொடருக்கான அணிக்கு மீண்டும அழைக்கப்பட்டுள்ளனர்.

*இங்கிலாந்து அணி விவரம்.*

மோர்கன் (அணித் தலைவர்), மொய்ன் அலி, பட்லர், ஹேல்ஸ், ஜேம்ஸ் ரெய்லர், சாம்பில் லிங்ஸ், பிரைன் கெட், ஆதில் ரஷித், ஸரீபன பின், வோக்ஸ், மார்க்வூட், டேவிட் வில்லி, பெுன் ஸ்ரோக்ஸ், ஜேசன் றோய்.

இரு அணிகள்மோதும்ஒரேயொரு இருபது-20 ஓவர் போட்டி 31ஆந் திகதி நடக்கிறது.

ஒரு நாள் தொடர் 3ஆம் திகதி தொடங்குகிறது. (க)

## சின்கியூல்ட் செஸ் போட்டி
# 2வது சுற்றில் ஆனந்த் தோல்வி



சின்கியூல்ட் கிண்ணத்துக்கான செஸ் போட்டியின் 2ஆவது சுற்றில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த தோல்வியடைந்துள்ளார்.

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் சின்கியூபீல்ட் கிண்ணத்துக்காக சர்வதேச செஸ் போட்டி நடந்து வருகிறது.

இதில் நேற்று நடந்த 2-வது சுறறு ஆட்டத்தில் 5 முறை உலக சமபிய னும், இந்திய கிராண்ட் மாஸ்டருமான விசுவநாதன் ஆனந்த், ரஷிய வீரர் அலெக்சாண்டர் கிரிசுக்கை சந்தித்தார்.

இந்த ஆட்டத்தில் ஆனந்த் 35 ஆவது காய்நகர்த்தலில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். ஆனந்த் தொடர்நது சந்தித்த 2ஆவது தோல்வி இதுவாகும். முதல் சுற்றில் அமெரிக்க வீரர் நகமுராவிடம் தோல்வி கண்டு இருந்தார். 2-வது சுற்று முடிவில் பல்கேரியா வீரர் வாசெலின் தபலோவ் 2 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறார். (க)

## உலக தடகள சம்பியன்ஷிப்
# 800 மீ. ஓட்டத்தில் ருடிஷா தங்கம்

15ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் 800 மீ. ஓட்டத்தில் கென்ய வீரர் டேவிட் ருடிஷா தங்கப் பதக்கம் வென்றார்.

உலக சம்பியன்ஷிப் போட்டியின் 800 மீ. ஓட்டத்தில் அவர் வென்றுள்ள 2ஆவது தங்கப் பதக்கம் இது. முன்னதாக 2009இல் இதே பிரிவில் தங்கம் வென்றுள்ளார்.

சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டியில் நேற்று நடைபெற்ற 800 மீ. ஓட்டத்தில் ஆரம்பம் முதலே முன்னிலையில் ஓடிய ருடிஷா ஒரு நிமிடம் 45.84 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

800 மீ. ஓட்டத்தில் நடப்பு ஒலிம்பிக் சம்பியனான ருடிஷாவிடமே உலக சாதனையும் உள்ளது. போலந்தின் ஆடம் சஸோத் (1:46.08) வெள்ளிப் பதக்கமும், போஸ்னியாவின் அமெல் டுக்கா (1:46.30) வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

*நீளம் தாண்டுதல்?*

ஆடவர் நீளம் தாண்டுதல் போட்டியில் ஒலிம்பிக் சம்பியனான பிரிட்டனின் கிரேக் ரூதர்போர்ட் 8.41 மீ. தூரம் தாண்டி தங்கத்தை தட்டிச் சென்றார். இதன்மூலம் இந்த உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் பிரிட்டனுக்கு 3ஆவது தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது. இதேபிரிவில் அவுஸ்திரேலியாவின பேப்ரைஸ் லேபிரே (8.24 மீ.) வெள்ளியும், சீனாவின் ஜியானன் வாங் (8.18 மீ.) வெண்கலமும் வென்றனர்.


வெற்றியின் மகிழ்வில் ருடிஷா

*1,500 மீ. ஓட்டம்?*

மகளிர் 1,500 மீ. ஓட்டத்தில் எதியோப்பியாவின் ஜென்ஸிபே டிபாபா 4 நிமிடம், 08.09 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். இதேபிரிவில் உலக சாதனையும் டிபாபா வசமே உள்ளது. கென்யாவின் பெய்த் கிப்இகோன் (4:08.96) வெள்ளியும், நெதர்லாந்தின் சிபான் ஹசன் (4:09.34) வெண்கலமும் வென்றனர்.

*400 மீ. தடை தாண்டுதல்?*

ஆடவர் 400 மீ. தடை தாண்டுதல் ஓட்டத்தில் கென்யாவின் நிகோலஸ் பெட் 47.19 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். உலக சம்பியன்ஷிப் போட்டியில் 400 மீ. தடை தாண்டுதல் ஓட்டத்தில் கென்யா வென்றுள்ள முதல் பதக்கம் இதுவாகும்.

இதேபிரிவில் ரஷ்யாவின் டெனிஸ் குட்ரியாவ்ட்சேவ் (48.05 விநாடிகளில்) வெள்ளிப் பதக்கம் வென்றதோடு, தேசிய சாதனையும் படைத்தார். பஹாமாஸின் ஜெப்ரி ஜிப்சன் (48.17) வெண்கலம் வென்றார். இதுவும் தேசிய சாதனையாக அமைந்தது.

*வட்டு எறிதல்?*

மகளிர் வட்டு எறிதல் போட்டியில் கியூபாவின் டெனியா கேபலெரோ 69.28 மீ. தூரம் வட்டு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

நடப்பு உலக சம்பியன் மற்றும் ஒலிம்பிக் சம்பியனான குரேஷியாவின் சேன்ட்ரா பெர்கோ விச்சுக்கு வெள்ளிப் பதக் கமே கிடைத்தது. அவர் 67.39 மீ. தூரம் வட்டு எறிந்தார். ஜேர்மனியின் நடின் முல்லர் (65.33 மீ.) வெண்கலம் வென்றார். (க)

# ஆட்டோவில் கொழும்பை சுற்றிய ஹோலி அணி


ஹோலி, பின்னி, ஹர்பஜன்

இலங்கை அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பெற்ற வெற்றியை இந்திய வீரர்கள் வித்தியாசமாக கொண்டாடியுள்ளனர்.

காலியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றியின் விளிம்புக்கு சென்ற இந்திய அணி பின்னர் வெற்றிவாய்ப்பை கோட்டை விட்டது.

ஆனால் கொழும்பில் நடந்த 2ஆவது போட்டியில் அபாரமாக ஆடி வெற்றி பெற்றது.

இவ்வெற்றியை அடுத்து கொணடாட்டங்களில் ஈடுபட்ட இந்திய வீரர்கள் நேற்று முன்தினம் காலை பட்மிண்டன் விளையாடி மகிழ்ந்தனர்.

பின்னர் மாலையில் ஆட்டோ ஒன்றை வாடகைக்கு எடுத்த ஹோலி, ஹர்பஜன் மற்றும் ஸ்ரூவேர்ட் பின்னி ஜாலியாக கொழும்பு நகரை வலம் வந்தனர்.

ஹர்பஜன் ஆட்டோவை ஓட்டுவது போன்றும், அணித்தலைவர் ஹோலி, ஸ்ரூவேர்ட் பின்னி ஆகியோர் பின்புறம் அமர்ந்திருப்பது போன்றும் உள்ள ஒரு புகைப் படத்தை ஹர்பஜன் தனது டுவிட்டரில் பதிவேற்றியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாதுகாப்பு எங்கள் கைகளிலே...!

யாழ்.போதனா வைத்தியசாலை என்பு முறிவுப் பிரிவும்
35ஆம் அணி மருத்துவப்பீட மாணவர்களும் இணைந்து நடாத்தும்

## வீதி விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வுக் கண்காட்சியும் இரத்த தான முகாமும்

இடம்:- யாழ்.மாநகரசபை இந்து விடுதி.
28.08.2015 மாலை 3.30 இற்கு ஆரம்பம்.
29, 30.08.2015 காலை 9.00மணி முதல் இரவு 8 மணிவரை

வடமாகாணத்தில் நடைபெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பான நேரடி ஒளி நாடாக்கள் ஒளிபரப்பப்படும்.



## டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.
☀ பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 077 5925088,
021 222 8680

(C-1812)


## கும்பாபிஷேக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய கும் பாபிஷேக நிகழ்வு இன்று வியா ழக்கிழமை காலை 6மெணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (இ-5-29)


## "றோயல் சுத்தமான தேங்காய் எண்ணெய்"

சுப்பு:- என்ன மணியண்ணே, கடைக்கு வந்து எல்லாத் தேங்கா யெண்ணைப் போத்தலையும் முறைச்சுப் பார்க்கிறியள்?
மணி:- இதில உள்ள எல்லாத்தையும் வாங்கி சமைச்சுப் பாத்திட்டன் ஒண்டிலையும் வாசனையோ சுவையோ இல்லை. எல்லாம் கலப்படம்.
சுப்பு:- இதுக்கு ஏன் குழப்பம். நேரடியா,சிவா நறுமணப் பூங்கா கடைக்கு போங்கோ. அங்க **"றோயல் தேங்காய் எண்ணையிண்ட"** சாம்பிளை வாங்கி கையில் பூசி மணந்து பாருங்கோ. பிறகு நீங்க அந்தத் தேங்காயெண்ணையை மட்டும் தான் வாங்குவியள். தரமான சுவையான, வாசனையான சாப்பாட்டிற்கு **"றோயல் சுத்தமான தேங்காயெண்ணையை"** அடிக்க எதுவும் இல்லையண்ணே. இப 200ml, 500ml அளவில கிடைக்குது. சாப்பாட்டிற்கு மட்டுமல்லாம தலைக்கும் வைக்கலாம்.
மணி:- அப்ப ஒரு கல்லில இரண்டு மாங்காய் எண்டு சொல்லு சுப்பு. எல்லா கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2567

Packed By
Royal Industry
Colombo-13

(1789)


# இந்துவாக வாழ்வோம் வினாவிடைப் போட்டி

நல்லூர் முருகப் பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன், வலம்புரி பத்திரிகையின் இணை- அனுசரணையுடன் இணைந்து நடத்தும்

### இந்துவாக வாழ்வோம், வினா- விடைப்போட்டி

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் **இந்துவாக வாழ்வோம்** செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக மேற்படி வினா-விடைப்போட்டி அமைகின்றது.

நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் ஓகஸ்ட் 28 ஆம் திகதி முதல் நடைபெறும். இந்துவாக வாழ்வோம் கண்காட்சியை பார்வையிடுவதன் மூலம் இப்போட்டியில் பங்குபெறலாம்.

ஓகஸ்ட்28 ஆம் திகதி முதல் செப்டெம்பர்- 10 ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாக்கள் வீதம் 14 வினாக்கள் பிரசுரமாகும்.

இவ்வினாவிடைப்போட்டியில் இடம்பெறும் வினாக்களுக்கான விடைகள், கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் புகைப்படங்கள் மற்றும் ஓவியங்கள் ஆகும்.

இவ்வினாவிடைப்போட்டியில் பங்குபற்றுபவர்களின் வயதிற்கேற்ப
பிரிவு- I 8 தொடக்கம் 10 வயது வரை;
பிரிவு-II 11 தொடக்கம் 13 வயது வரை ;
பிரிவு III 14 தொடக்கம் 16 வயது வரை ;
பிரிவு- IV 17 தொடக்கம் 28 வயது வரை என 4 பிரிவுகளாக நடைபெறும்.

பங்குபற்றுபவர்களின் வயதுப் பிரிவுகளின் அடிப்படையிலேயே பதில்கள் எதிர்பார்க்கப்படுவதுடன் புள்ளிகளும் அவ்வாறு வழங்கப்பட்டு 4 பிரிவுகளுக்கும் தனித்தனியாக பரிசில்கள் வழங்கப்படும்.

எழுதிய விடைகளை செப்டெம்பர் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்திலோ அல்லது, இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்திலோ கையளித்தல் அவசியம்.

இவ்வினாவிடைப் போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கான நேர்காணல் நடுவர்களினால் செப்டெம்பர் 13 ஆம் திகதி, பிரிவு I காலை 9 மணியிலிருந்து 10 மணிவரையும் பிரிவுII முற்பகல் 10 மணியிலிருந்து 11 மணிவரையும் பிரிவு III முற்பகல் 11 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரையும் பிரிவு IV நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரையும் இல. 9 , செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் மண்டபத்தில் நடைபெறும். ஆச்சாரியாரின் முடிவே இறுதியானது.

மேலதிக தொடர்புகளுக்கு: *சின்மய ஞானவேல்*
இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே. 021 222 3447


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 51 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ் PR<br>தொ.இ: B/1199 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 30 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1950 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிட்ம்<br>கி.பா: 16 செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L, NCT அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/3369 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 15 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பல் வைத்தியர்<br>தொ.இ: G/1951 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 13 3/4 உயரம்: 6'<br>தகைமை/தொழில்: B.ENG CIVIL/ பொறியியளாளர் லண்டன் NOT PR<br>தொ.இ: B/3863 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 66 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1953 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 8 1/2 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில் இந்தியா<br>தொ.இ: B/1213 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ தனியா்ர் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1955 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

27.08.2015
(ஆவணி 10, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துவாதசி காலை 7.05 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.27மணிவரை
உத்தராடம் முன்னிரவு 7.13மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
பிரதோச விரதம்
சுபமுகூர்த்த தினம்
இளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்,திருவாதிரை<br>இரவு 5.39 இற்கு<br>மகர-சந்<br>மேல் நோக்கு நாள் | | செவ் சுக் |
| சந் | | | குரு சூரி |
| | | சனி | ராகு புத |

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவலாம்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம், காரிய இடையூறுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கும்பம்** உறவினர் நலன்கருதிய செலவுகள் ஏற்படலாம், சிறிய வேலை யொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** அன்பு நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**மகரம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பெரியோர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, உடல்நலம் சீராகும்.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**தனுசு** நீண்டநாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு உதவும் எண்ணம் உருவாகும், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**கன்னி** சுபசெய்திகள் வந்து சேரலாம்,உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கார உற்சவம்

அல்லைப்பிட்டி அருள்மிகு கறண்டப்பாய் கந்தசுவாமி கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் உற்சவகால பிரதம குருவாக சிவஸ்ரீ.தி.ஜெயராஜ் குருக்கள் கலந்து கொள்கின்றார். இதன்போது உற்சவ கால பத்துதினங்களும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் ஆன்மீகச்சொற்பொழிவுகளை வழங்கவுள்ளார்.

உற்சவ காலத்தில் தினமும் முற்பகல் 10மணிக்கு ஸ்நபனாபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூஜைகள், வீதியுலா என்பன நடைபெறவுள்ளன. (இ-5)

## திருவெண்காட்டில் இசைச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடுஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு "கானகதா வாரிதி" பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் "தலையால் நடந்த தலைவி" எனும் இசைச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (இ-5)

# வடக்கு மாகாண சபை
# அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிகளுக்கு தமிழர்கள் பெரும்பான்மையாக புறக்கணிக்கப்பட்டு சிங்களவர்களிற்கு நியமனம் வழங்கப்பட்டமை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வடக்கு மாகாண முதலமைச்சரினால் கடிதம் அனுப்பியதன் பிற்பாடும் இரகசியமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து வடக்கு மாகாண உறுப்பினர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.**

வடக்கு மாகாண சபையின் 33ஆவது அமர்வு நேற்று முன்தினம் காலை கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இவ்வமர்வில் வடக்கு மாகாணத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிகளுக்கு 90 வீதம் சிங்களவர்கள் நியமனம் செய்யப்பட்டமை குறித்து வடக்கு மாகாண விவசாய அமைச்சரினால் முதலமைச்சரிடம் வினா எழுப்பப்பட்டது.

இதன் போதே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் குறித்த நியமனம் நடைபெறுவதற்கு முன்பாகவே இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளதாகவும் விரைவில் இது குறித்து ஜனாதிபதி நல்லதொரு முடிவினை எடுப்பார் என்றும் நினைக்கின்றேன். எனினும் ஏன் இவ்வளவு அவசர அவசரமாக அந்த நியமனத்தை வழங்கினார்கள் என தெரியவில்லை என்றார்.

வடக்கு மாகாணத்திலிருந்து விவசாய, ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் வெற்றிடத்திற்கு தகுதியான 5 ஆயிரத்து 87 பேர் விண்ணப்பம் செய்திருந்த போதிலும் குறித்த வெற்றிடத்துக்கு உள்வாங்கப்படவிருந்த 361 பேரில் 332 பேர் சிங்களவர்களாகவும் 29 பேர் மட்டுமே தமிழர்களாகவும் இருந்தனர்.

எனினும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த வடக்கு விவசாயிகள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் வடக்கு மாகாணசபை, வடக்குமாகாண ஆளுநர், முதலமைச்சர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் என்போர் இது விடயத்தில் கவனம் செலுத்தியிருந்தனர். இந்நிலையில் குறித்த நியமனம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு கொண்டு வந்த பிற்பாடும் இரகசியமாக குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது குறித்தே நேற்றைய தினம் சபையில் பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு எதிர்க்கட்சி உருப்பினரினால் பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (இ-4)




### விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவியாளர்
# நியமனங்களை அரசு மீளப் பெறவேண்டும்
### வடக்கு விவசாய அமைச்சர் வலியுறுத்து

வடக்கில் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவியாளர்களாக மிகப்பெரும் எண்ணிக்கையில் சிங்களவர்களை நியமித்திருப்பது சாதாரணமான ஒரு விடயமல்ல. தமிழ்மக்களின் விவசாயத்துக்கு, தமிழ்மக்களின் பண்பாட்டுக்கு, தமிழ் இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்புக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய இந்த நியமனங்களை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும். இல்லாவிடில், அதற்கெதிராக நாம் போராடுவோம் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவியாளர்களாக அதிக எண்ணிக்கையில் சிங்களவர்களை நியமித்திருப்பது தொடர்பாக மாகாண சபையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் காலத்தில் வடக்கில் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவியாளர்களின் நியமனங்கள் நடைபெற இருப்பதும், இவர்களில் 90 விழுக்காடு சிங்களவர்களாக இருப்பதும் தெரியவந்த உடனேயே இது தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கும், எமது முதலமைச்சரின் மூலம் இந்நியமனங்களை மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டது.

விவசாயிகளும் இந்நியமனங்களுக்கு எதிராக யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தார்கள். இதன் விளைவாகத் தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் முடியும்வரை நியமனங்களை ஒத்திவைக்குமாறு பணித்திருந்தார். ஜனாதிபதியின் செயலாளரிடம் இருந்து முதலமைச்சருக்கு அவரது கடிதம் விவசாய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கடிதமும் வந்திருந்தது.

ஆனால், எமது கோரிக்கைகளையும் விவசாயிகளின் போராட்டங்களையும் பொருட்படுத்தாமல் கமநல அபிவிருத்தித் திணைக்களம் தேர்தல் முடிந்த உடனேயே மிகவும் இரகசியமான முறையில் நியமனங்களைச் செய்து முடித்திருக்கிறது. சிங்களவர்களின் எண்ணிக்கை இப்போது குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வடக்கில் இப்போது வழங்கப்பட்டுள்ள 192 நியமனங்களில் 158 பேர் சிங்களவர்கள் உள்ளார்கள்.

விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவியாளர்களின் கடமைப் பட்டியலில் கிராம மட்டங்களில் விவசாயிகளின் அறிவை மேம்படுத்துவது இவர்களது பணிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்களமொழி புரியாத எமது விவசாயிகளின் அறிவை தமிழ் தெரியாத இவர்களால் எவ்வாறு மேம்படுத்த இயலும்?. இவர்களின் கடமைகளில் ஒன்றாக, விவசாயிகளின் பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதும் இடம்பெற்றுள்ளது. தனித்துவமான உழவுமுறை, பயிரிடும்முறை, நீர்ப்பாசனமுறை என்று தென்இலங்கையிலிருந்து வேறுபட்ட எமது விவசாயப் பண்பாட்டை இவர்களால் எவ்வாறு பேணிப்பாதுகாக்க முடியும்?. மாறாக, இந்நியமனங்களானது எமது விவசாயத்தைப் பெருமளவுக்குப் பாதிக்கச் செய்வதோடு தமிழ்மக்களின்தேசிய அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் எமது தனித்துவமான விவசாயப் பண்பாட்டையும் சீரழிப்பதாகவே அமையும்.

பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தில் இலிகிதர் பதவிக்குக் கீழ்ப்பட்ட நியமனங்கள் மாவட்ட ரீதியாக, மாவட்டங்களின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப செய்யப்பட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மத்திய அரசாங்கம் தான் வழங்கியுள்ள முறையற்ற இந்நியமனங்களை உடனடியாக மீளப்பெற்று, மாவட்ட ரீதியான இன விகிதாசாரத்துக்கு ஏற்ப மீளவும் நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)



வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிமனை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரனால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள அலுவலகத்திற்கான இந்த புதிய கட்டடத் தொகுதியில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர் அலுவலகமும் பிரதம பொறியியலாளர் அலுவலகமும் இயங்கவுள்ளன. (படங்கள்:- பொ. சோபிகா)

# பல்லிய இசைக்கருவிகளின் இசைச் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் சமாதானப் பாலமாக ஜிகா (JICA) நிறுவனத்தின் அனுசரணையுடன் பல்லிய இசைக்கருவிகளின் இசைச் செயற்றிட்டம் இன்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கேட்போர் கூட்டத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

[illegible] அவரது அளிக்கையில், முல்லைத்தீவு மற்றும் குருநாகல் மாவட்டங்களிலுள்ள குறைந்த வருமானப் பின்னணியைக் கொண்ட விவசாய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் மு/மல்லாவி மகா வித்தியாலயம், மு/யோகபுரம் மகா வித்தியாலயம், கு/ குருநாகல் லக்டாஸ் டீ மெல் கல்லூரி, கு/ குருநாகல் பொத்துபோவ மகா வித்தியாலயம் மற்றும் கு/ குருநாகல் குணானந்த வித்தியாலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 450 மாணவர்களுக்கு JICA நிறுவனத்தின் அனுசரணையுடன் யப்பானைச் சேர்ந்த (worldship Orchestra) குழுவினரால் பல்லிய இசைக்கருவிகளின் ஆற்றுகை தொடர்பாக பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது.


இக் குழுவைச் சேர்ந்த 25உறுப்பினர்களுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பல்லிய இசைக்கருவிகளின் ஆற்றுகை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்வியியலாளர்கள், இசை ஆர்வலர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து சிறப்பிக்குமாறு அறிவித்துள்ளார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசாங்கத்திற்கு தடையாக எதிர்க்கட்சி

## ஐ.தே.க.குற்றச்சாட்டு



(கொழும்பு)

**நாட்டில் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு எதிர்க்கட்சியே பெரும் தடையாக உள்ளது. எனவே, தேசிய அரசாங்கத்தை நிறுவுவதானது எதிர்க் கட்சியின் கைகளிலேயே தங்கியுள்ளது. எதிர்க்கட்சியின் தீர்மானத்துக்காக நாங்கள் காத்திருக்கின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை எதிர்க்கட்சி இணங்காவிடின் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைக்கவும் தயாராகவுள்ளது. மேலும் நாட்டின் நலனை கருத்தில் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் எமக்கு ஆதரவு வழங்க வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்களுக்கான பதவியேற்பு விரைவில் இடம்பெறலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹாசிம் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களை பெற்று வெற்றிபெற் றது.

ஆகவே எமக்கு ஆட்சி அமைப்பதற்கு எதிர்க்கட்சியின் ஆதரவு ஒருபோதும் அவசியம் ஏற்படாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடைய ஆதரவும்எமக்கு தேவைப்படாது. 120 ஆசனங்களை பெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு நல்குவதற்கு எமக்கு பலர் எதிர்க்கட்சி தரப்பில் உள்ளனர்.

இருந்தபோதிலும் நாட்டின் நலனை கருத்திற் கொண்டே தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது. நாட்டிற்கு தேவையானபல்வேறுவேலைத்திட்டங்களை தேசிய அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கவுள்ளோம். ஆகவே பெரும்பான்மை ஆசனங்கள் இருந்தபோதிலும் நாட்டின் நலனை கருத்திற் கொண்டே தேசிய அரசாங்கம் அமைத்து ஒருமித்த கொள்கையுடன் செயற்பட இருந்தோம்.

இதற்காக நாம் தயார் நிலையில் இருக்கின்றோம். அத்துடன் இது தொடர்பில் எமது நிலைப்பாட்டையும் நாம் அறிவித்துவிட்டோம். ஆனாலும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதற்கு இடையூறு விளைக்கும் வகையில் செயற்படுகின்றது. அமைச்சு பதவிகளை பகிர்வதில் குழப்பம் விளைவிக்கின்றனர். எவ்வாறாயினும் விரைவில் அமைச்சு பதவி வழங்கவுள்ளோம்.

இந்நிலையில் தேசிய அரசாங்கம் அமைத்து நாட்டிற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பானஇறுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமிருந்து சாதகமான முடிவு கிடைக்கப்பெறும். இல்லையேல் தனியாக ஆட்சி அமைப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு சந்தர்ப்பமுள்ளது.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே தமிழ் தேசிய கூட்டமைப்பினதும் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவும் எமக்கு அவசியமாகும். எமக்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவு கிடைக்கவில்லை என்றால் 120 ஆசனங்களை பெற்று ஐக்கிய தேசி யக் கட்சியின் ஆட்சியை கொண்டு செல்வோம்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 150 |
| தக்காளி | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 60 | 80 |
| கரட் | 100 | 120 | 150 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 120 | 60-120 |
| பெரிய வெங்காயம் | 100 | 160 | 120 |
| பாகற்காய் | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 30 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40-45 |
| இராசவள்ளி | 140 | 200 | — |
| வெங்காயப்பூ | 200 | 100 | 160 |
| முள்ளங்கி | 40 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 |


## facebook (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 471

Search for people, places and things Nagendram Home

மதிசன் கணேஸ்




கரிகரன் கரி




ஹ்ராட் பெயின்




சோபிதன் சோபி




சால்ஸ் நியூமன்




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வீரன் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த நிகழ்வு அனுஷ்டிப்பு



பண்டார வன்னியன் நற்பணி மன்றமும் வவுனியா நகரசபையும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய வீரன் பண்டார வன்னியனின் 212ஆவது ஞாபகார்த்த விழா நேற்று முன் தினம் காலை 8மணிக்கு வவுனியா மாவட்ட செயலகம் அருகில் உள்ள பண்டாரவன்னி யனின் சிலைக்கு மலர் மாலை அணிவி த்தலுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம், ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்ற ம்பலம், முன்னாள் நகரசபை உபதலைவர் க.சந்திலகுலசிங்கம் எனப் பலரும் கலந்து கொண்டு மலர் மாலைகளை அணிவித்தி ருந்தனர். அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ் வுகள் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-250-281)

# குளங்களினுள் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் நன்னீர் மீன்குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டன



நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வா தாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் பாவற் குளம், முள்ளிக்குளம் ஆகிய குளங்களில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் நன்னீர் மீன் குஞ்சுகள் வடக்கு மாகாண மீன் பிடி அமைச் சின் உதவி மாகாண பணிப்பாளர் எ.சகிலா பானுவால் வைப்பிலிடப்பட்டுள்ளன.

நன்னீர் மீன்குஞ்சுகள் கடந்த 12, 14 ஆகிய தினங்களில் மேற் படி குளங்களினுள் விடப் பட்டுள்ளன.

வடமாகாணத்தில்உள்ள நன்னீர் மீன் பிடியாளர் களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் வடமாகாணமீன்பிடிஅமைச் சின் வருடாந்த நிதியொதுக் கீட்டின் கீழ் பல குளங்களில் மீன்குஞ்சுகள் வைப்பிலி டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-9)




# நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோருக்கான கொடுப்பனவு விபரங்கள்

(மல்லாவி)

நடைபெற்று முடிந்த 8ஆவது பாராளு மன்ற தேர்தலின் தேர்தல் கடமைகளில் ஈடு பட்ட அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு சுற்றறிக்கையை தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான சுற்றுநிருபங்கள் மாவ ட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலக ங்களுக்கும் மற்றும் உரிய அரச அலுவலகங் களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலருக்கு 3ஆயிரத்து 750 ரூபாவும் பிரதேச செயலக இணைப்பு உதவி தெரிவத் தாட்சி அலுவலருக்கு 3ஆயிரத்து 750 ரூபா வும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவல ருக்கு 3ஆயிரம் ரூபாவும் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், எழுதுவினைஞர் ஆகியோ ருக்கு 2ஆயிரம் ரூபாவும் விசேட, கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலருக்கு 2ஆயி ரத்து 100ரூபாவும் கனிஷ்ட ஊழியருக்கு ஆயிரத்து 450 ரூபாவும் வாக்குப் பெட்டிகள் விநியோக கடமைகளில் ஈடுபட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு நாளொன்று ஆயிரம் ரூபாவும் வாக்குப்பெட்டிகள் விநி யோக கடமைக்கான சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 800 ரூபாவும் அலுவ லக உதவியாளருக்கு 700 ரூபாவுமாக தேர் தல் தினத்தன்று கடமைகளில் ஈடுபட்ட ஊழி யர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை வாக்கெண்ணும் கடமையில் ஈடுபட்ட காலி,மாத்தறை ,அம்பாந்தோட்டை, பொலநறுவை,பதுளை ஆகிய மாவட்டங்க ளுக்கான தலைமை வாக்கெண்ணும் அலுவ லருக்கு 6ஆயிரத்து 250 ரூபாவும் பிரதி தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கு 4ஆயிரத்து 250 ரூபாவும் உதவித்தெரிவ த்தாட்சி அலுவலருக்கு 3ஆயிரத்து 500 ரூபாவும் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவ லருக்கு 2ஆயிரத்து 300 ரூபாவும் கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலருக்கு 2ஆயிரம் ரூபாவும் கனிஷ்ட ஊழியருக்கு ஆயிரத்து 250 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை களுத்துறை, கண்டி, மாத் தளை, நுவரெலியா,யாழ்ப்பாணம் ,திருகோ ணமலை,புத்தளம்,அநுராதபுரம், இரத்தின புரி, கேகாலை ஆகிய இடங்களில் வாக்கெண் ணும் நிலையங்களில் கடமை புரிந்த தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கு 6ஆயிரத்து 500ரூபாவும் பிரதி தலைமை வாக்கெண் ணும் அதிகாரிக்கு 4ஆயிரத்து 500ரூபாவும் உதவித்தெரிவத்தாட்சி அலுவலருக்கு 3ஆயி ரத்து 750 ரூபாவும் சிரேஷ்ட தலைமை தாங் கும் அதிகாரிக்கு 2ஆயிரத்து 450 ரூபாவும் கனிஷ்ட ஊழியருக்கு ஆயிரத்து 350 ரூபா வும் வழங்கப்படவுள்ளது.

அதேவேளை கொழும்பு,கம்பஹா,வன்னி, மட்டக்களப்பு,திகாமடுல்ல,குருநாகல் ஆகிய மாவட்டங்களில் வாக்கெண்ணும் நிலையங் களில் கடமையாற்றிய தலைமை வாக்கெண் ணும் அதிகாரிக்கு 6ஆயிரத்து 750 ரூபாவும் பிரதி தலைமை வாக்கெண்ணும் அதிகாரிக்கு 4ஆயிரத்து 750 ரூபாவும் உதவித் தெரிவத் தாட்சி அலுவலருக்கு 4ஆயிரம் ரூபாவும் சிரே ஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிக்கு 2ஆயி ரத்து 600ரூபாவும் கனிஷ்ட ஊழியருக்கு ஆயிரத்து 450 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஆசிரியர் கள்,அதிபர்கள் ஆகியோருக்கான கொடுப்ப னவுகள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவல கம் ஊடாக வழங்கப்படும். இதற்குரிய விண் ணப்பப்படிவங்களை மிக விரைவாக பெற்று பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவுகள் யாவும் 75 நாட்களு க்குள் வழங்கி முடிக்கப்பட வேண்டி இருப்ப தால் கடமையாற்றிய அலுவலர்கள் அனை வரும் இதனைக் கவனத்திற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் அதில் குறிப்பிட் டுள்ளார். (2-15)

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை செய்யும் நிலையம் சுற்றிவளைப்பு

(மல்லாவி)

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியி லுள்ள அம்பலாங்கொடை பகுதியில் முறைப் படி அனுமதி பெறப்படாத நிலையில் சுத்தி கரிக்கப்பட்ட குடிநீர் என போத்தல்களில் அடைக்க தயாராக இருந்த நிலையில் வெற் றுப்போத்தல்கள்,மூடிகள்,பொலித்தீன் பைகள் உள்ளிட்ட பொருட்கள் வாகனத்துடன் வவுனியா மாவட்ட சுகாதார பரிசோதகர்களின் திடீர் சுற்றி வளைப்பின்போது கைப்பற்றப்பட் டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள அம்ப லாங்கொடை பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை நிலையமொன்று முறைப் படி அனுமதி பெறப்படாத நிலையில் சுத்திகரிக் கப்பட்ட குடிநீர் என 20லீற்றர்,5லீற்றர் ஆகிய போத்தல்களில் குடிநீர் நிரப்பப்பட்டு யாழ்ப் பாணம் உட்பட வடபகுதியின் பல பாகங்களு க்கும் அனுப்பி வைக்கப்பட்டு விற்பனை செய் யப்பட்டு வந்துள்ளது.

இது தொடர்பான இரகசிய தகவல் ஒன்று வவுனியா மாவட்ட சுகாதார பரிசோதகர்களு க்கு கிடைக்கப்பெற்றதையடுத்து சம்பவ இடத்தில் திடீர் சுற்றி வளைப்பொன்றை மேற்



கொண்டபோது குடிநீர் விற்பனை நிலையத் திற்கு முன்பாக வாகனம் ஒன்றில் கொண்டு வரப்பட்ட 20லீற்றர்,5லீற்றர் வெற்றுப்போத் தல்கள் உட்பட போத்தல்களை அடைக்கும் மூடிகள் மற்றும் அதனை பொதி செய்யும் பொலித்தீன் பைகள் ஆகியவை வாகனத் தினுள் இருந்துள்ளன.

இதனைக் [illegible] சுகாதார பரிசோ தகர்கள்,குடிநீ[illegible] நிலையத்தின் உட்பகுதியினுள் நுழைந்த போது சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை செய்வ தற்கு பயன்படுத்தப்பட்ட கிணறு சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்டது.

இதனையடுத்து அக்கிணற்றின் நீரின் மாதிரிகளும் பரிசோதனை செய்வதற்காக எடுத்துச் சென்றுள்ளதுடன் மேற்படி நிலை [illegible] நடவடிக்கை எடுக்கவுள்ள [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15-250)

# பேருந்தை கடத்திய இருவர் கைதாகினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான கடத்தப்பட்ட அரச போக்கு வரத்து பேருந்தொன்று "ஹோஹம்ப" எனும் இடத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அரச போக்குவரத்து பேருந்து ஒன்று அதிகாலையில் சேவையில் ஈடுபடுத் துவதற்காக கொக்கிளாய் எனும் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.


அதனை இரு நபர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிய ளவில் கடத்திச் சென்றிருந்தனர்.


சம்பவம் தொடர்பாக போக்குவரத்துச் சபையினரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து துரிதமாகச் செயற் பட்ட முல்லைத்தீவிலுள்ள விசேட பொலிஸ் பிரிவினர், ஹோஹம்ப எனும் இடத்தில் வைத்து குறித்த பேருந்தையும் அதிலிருந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து கைது செய்யப்பட்ட இருவரையும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அழைத்து சென்று மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தெல்லிப்பழை துர்க்கையம்பாள் நம்துயர் துடைக்க தேரேறி வருகிறாள்





சோத்தமனின் கைவண்ணத்தில் உருவான பசுவும் கன்

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



தேசம் போற்றும் தெல்லி நகர் துர்க்காதேவி தேரேறி வரும் திருநாள் இன்று இத் தெய்வீக நாளில் அம்பாளை தரிசித்து ஆறுதல் பெறுங்கள். ஆத்மீக பலமே அனைவரையும் காக்கும் மனித வாழ்வு மகத்தானது மனித மனங்களை புனிதப்படுத்தும் தெய்வீக நிலையங்களே திருக்கோவில்கள். தெல்லிப்பழை துர்க்கை அம்பாளின் திருக்கோவில் வாசல் வந்தவர்கள் அத் தெய்வீகத் திருவருளை உணர்வர். இன்று பல்லாயிரம் பக்தர்கள் அம்பாளைத் தேடி வந்து தரிசிக்கும் நன்நாள் அம்பாள் அனைவரையும் காத்து நல்லருள் பாலிப்பாள் என்பதில் ஐயமில்லை.

சித்தர்மகான் கதிர்காமர் ஸ்தாபித்த இத்திருக்கோவிலை வளர்த்தெடுத்துக் காத்த அனைவரையும் இந்நாளில் வணங்குகிறேன். தன் வாழ்வை அர்ப்பணித்து இக்கோவிலின் மேன்மைக்காக உழைத்து சிறியேனை இக்கோவிலில் இணைத்த அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நீள நினைந்து வணங்குகிறேன். அம்பாளின் திருவருளாலும் அன்பர்களின் பேராதரவாலும் தர்மகர்த்தா சபை, நிர்வாக சபை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பெண்கள் தொண்டர் சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம், சிவாச்சாரியார்கள், பணியாளர்கள் அனைவரது ஒன்றுபட்ட உழைப்பினால் எமது தேவஸ்தானம் சகல சிறப்புக்களுடனும் குறைவின்றி மேன்மை பெற்று விளங்குகிறது. தேர்த் திருவிழா நன்நாளில் அன்பர்கள் அனைவருக்கும் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகின்றேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

சிவபூமி என போற்றப்படுகின்ற ஈழத்திரு நாட்டில் பசுவதையை தடுப்பதற்கும் கோமாதா வழிபாட்டினை முன்னுரிமைப்படுத்துவதற்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் முன்பாகபசுவும் கன்றும் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.

இந்திய சிவ ஆலயங்களில் ஆலய பூசைகளோடு கோமாதா பூசையும் இடம் பெறுவது வழக்கம். இந்த மரபு வழிபாட்டினையே துர்க்காதேவி தேவஸ்தானம் ஈழத்தில் தெல்லிப்பழையெனும் நகரில் ஏற்படுத்தியுள்ளது.

பசுக்களை கொல்லாதீர்கள் என்பதற்கு இதுவொரு முன்னுதாரண பணியாக பசு ஒரு தெய்வம் என்ற அடையாளத்தை மக்களிடத்தே பரப்பி பசுவை கொல்வதிலிருந்து பாதுகாப்பதற்கும் இச்சிற்பம் உதவி புரியும்.

ஆலயத்தின் முன்புறமாக உள்ள விருட்சத்தின் அருகில் இச்சிற்பம் செதுக்கப்பட்டிருப்பதனால் இறை தரிசனத்திற்கு வருகின்ற அடியார்கள் முதலில் பசுவை வணங்கி விருட்சத்தையும் வணங்கிச் செல்ல முடியும்.

இந்த வழிபாட்டு மரபு மூலம் சிவபூமியில் பசுவதைக்கு எதிரான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் ஆரம்பித்துள்ள நிலையில் இம் மரபு வழிபாட்டு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.



ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் முதலில் கோபுர தரிசனத்தினையும் பின்பு கோமாதா தரிசனத்தையும் மேற்கொண்டதனை அவதானிக்க முடிந்தது.

தென்னிந்தியாவின் பிரபல சிற்பக்கலைஞர் புருறினுடைய சிற்பம் தத்ரூபமான முறையில் பார்ப்பவரை கவரும் வகையில் செதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பசுவதை என்பது பேசு பொருளாக மட்டுமே யாழில் காணப்பட்டது.

ஆனால் பசு வழிபாட்டு முறை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் பசுவை கடவுளாக வணங்கும் புதியதொரு இந்து சமய புரட்சி ஈழத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

துர்க்காதேவி விசேட தேவையுடையவர்களை தன்னுடைய அரவணைப்பில் காத்துவருகிறார்.

தெல்லிப்பழையில் பக்த கோடிகளுக்கருள் பாலிக்கும் துர்க்கை அம்பாளின் தேர்திருவிழா இன்றையதினம் நடைபெறவுள்ள நிலையில் அதிகாலை 4.30 மணிக்கு பள்ளி எழுச்சியுடன் விசேட பூசைகள் ஆரம்பமாகி 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் 9.30 மணி க்கு இரதோற்சவமும்நண்பகல் 12 மணிக்கு இரதவரோகணமும் இடம்பெறவுள்ளது.

உ.சாளின்

# வடமாகாணத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் நடவடிக்கை

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வடக்கில் அதிகரித்து காணப்படும் போதைப் பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவது குறித்து சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் காலை கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா யாழ். மாவட்ட செயலகத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் யாழிலுள்ள பிரபல பாடசாலைகளிலும் அதனையண்டிய பிரதேசங்களிலும் போதைப்பொருட்கள் விற்கப்படுவதாகவும்,

மற்றும் பல இடங்களில் சிறுவர் துஷ்பிரயோகம், விபச்சாரம், சட்டவிரோத மதுபாவனை, விற்பனை நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு அது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கும் வண்ணமும் கோரப்பட்டிருந்தது. மேலும் இவ்வாறான விடயங்கள் கடந்த அமர்வின் போது குறிப்பிட்டதோடு முதலமைச்சருக்கும் அது பற்றி கடிதம் மூலம் தெரிவித்திருந்தேன்.

பல பிரபல்ய பாடசாலைகளில் போதைவஸ்து பாவனை பொருட்கள் விற்பனையாகின்றது என யாழ்.மாவட்ட செயலகமே அறிவித்திருந்தும் பின்னணியில் இது எமது வருங்கால சந்ததியினரை போதைப்பொருள் அடிமை சமுதாயமாக மாற்றும் முயற்சியாகும். நாம் வெறுமனே பிறர் மீது குற்றம் சாட்டிவிட்டு பாராதிருப்பது மக்கள் எம்மீது துரோகம் இழைத்தவர்களாக அமையும். ஆதலால் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரேரணை ஒன்றினை கொண்டு வந்தார்.

இப்பிரேரணை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். புங்குடுதீவில் பாடசாலை மாணவியொருவர் கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் மாகாணம், மாவட்டம், பிரதேச சபை ஒவ்வொரு பொலிஸ் நிலையம் என்ற ஒழுங்கில் ஒவ்வொரு மாதமும் அறிக்கைகள் பிரதம செயலாளருக்கு அறிக்கை கிடைத்து கொண்டுள்ளன.

முழு அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப் படும் என முதலமைச்சர் மேலும் தெரிவிததார்.

மேலும் வடக்கில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை, விற்பனையை கட்டுப்படுத்தி அழகிய வடக்கு மாகாணத்தை உருவாக்க வடக்கு மாகாணத்திற்கு என தனியான போதைப் பொருள் தடுப்பு பொலிஸ் பிரிவு ஒன்றினை அமைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரும் பிரேரணை ஒன்றினை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சுகிர்தன முன்மொழிந்திருந்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருட்டுப் பயலே!

ஏருக்கூர் என்னும் ஊரில் நீலகண்டன் என்பவன் தன் மனைவியோடு வாழ்ந்து வந்தான்.

அந்த ஊரில் திருடர்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

அவர்களிடம் விலை உயர்ந்த பொருட்களைப் பறி கொடுத்தவர்கள் அரசரிடம் அழுது புலம்பினர்.

அந்தத் திருடர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு, நூறு பொற்காசுகள் பரிசு என்று அறிவித்தார் அரசர்.

காவல் இருந்த வீரர்கள் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தனர்.

அவர்களால் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை.

ஒருநாள் இரவு, நீலகண்டனும், அவர் மனைவியும் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தனர்.

ஜன்னலைத் திறப்பது போன்ற ஓசை கேட்டு நீலகணடனின் மனைவி விழித்துக் கொண்டாள்.

“எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! நம் வீட்டிற்குள் திருடர்கள் வந்து விட்டனர். எழுந்திருங்கள்,” என்று அவனை உலுக்கி எ்ழுப்பினாள்.

எழுந்த் அவன் பாதுகாப்பிற்காகத் தடியைத் தேடினான்.



அப்போது திருடன் ஒருவன் ஜன்னல் வழியாக உள்ளே வந்தான்.

அவன் கையில் பளபள வென்று கத்தி மின்னியது.

அவர்கள் இருவரையும் பார்த்த அவன், “என்னை எதிர்க்க முயற்சி செய்யாதீர்கள்.

வீட்டில் உள்ள நகைகளையும், பணத்தையும் தந்து விடுங்கள்.

உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன்.

ஏதேனும் மீறி நடந்தால், இந்தக் கத்தியால் குத்திக் கொன்று விடுவேன்,” என்று மிரட்டினான்.

துணிவை வரவழைத்துக் கொண்ட நீலகண்டன், “நீ சொன்னது போலவே நடந்து கொள்கிறோம்.

நம் நகரத்தையே நடுங்க வைக்கும் திருடர் கூட்டத்தில் நீயும் ஒருவனா? ஏன் தனியாக வந்திருக்கிறாய்?” என்று கேட்டான்.

“நான் அந்தத் திருடர் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல... சில்லறைத் திருட்டுகள் செய்பவன்.

அதனால்தான் இப்படிப்பட்ட வீடாகப் பார்த்துத் திருடுகிறேன்.

வீண் பேச்சுப் பேச வேண்டாம். உடனே நகைகளை எடுத்துத் தா,” என்று மிரட்டினான் அவன். “கொண்டு வருகிறேன்,” என்ற நீலகண்டன் அடுத்த அறைக்குள் சென்றான். நகைகளை எடுப்பதற்காக அலமாரியைத் திறந்தான்.

அப்போது அந்த வீட்டின் முன் பக்கக் கதவை யாரோ இடிப்பது போன்ற ஓசை கேட்டது. இதைக் கேட்ட திருடன் அஞ்சி நடுங்கினான்.

“ஐயோ! அந்தத் திருடர்கள் கூட்டம்தான் வந்து விட்டது.

அவர்கள் என்னைப் பார்த்தால் உயிருடன் விட மாட்டார்கள்.

என்ன செய்வேன்? இங்கே வந்து மாட்டிக் கொண்டேனே...” என்று புலம்பினான்.

இதைக் கேட்ட நீலகண்டன் நல்ல வாய்ப்பு கிடைத்தது என்று மகிழ்ந்தான்.

அந்தத் திருடனைப் பார்த்து, “திருடர்களிடம் இருந்து நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்.

அந்தக் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொள். என்ன நடந்தாலும் வெளியே வராதே,” என்றான். அதன்படியே அந்தத் திருடன் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டான்.

தன் மனைவியை அழைத்த நீலகண்டன், ‘அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னான்.

அவளும் தலையை ஆட்டினாள். “நான் பின்பக்கத் கதவு வழியாக வெளியே செல்கிறேன்.

உதவிக்கு ஆட்களை அழைத்து வருகிறேன்.

அதுவரை நான் சொன்னது போலச் சமாளி. எதற்கும் அஞ்சாதே,” என்ற அவன் அங்கிருந்து வேகமாகச் சென்றான்.

முன் பக்கத் கதவை உடைத்துக் கொண்டு ஐந்து திருடர்கள் வீட்டிற்குள் நுழைந்தனர்.

அவர்கள் கையில் கத்தியும், ஈட்டியும் வைத்திருந்தனர். பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தனர். அங்கே பெண் ஒருத்தி மட்டும் நின்றிருப்பதைப் பார்த்துத் திகைப்பு அடைந்தனர். “என்ன? நீ மட்டும் தனி யாக இருக்கிறாய். உன் கண வன் எங்கே?” என்று அவர் களில் ஒருவன் கத்தினான். (தொடரும்)




- 1689 - ரஷ்யாவுக்கும் சீனாவின் சிங் பேரரசுக்கும் இடையில் நெர்ச்சின்ஸ்க் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1813 - ஆஸ்திரியா, ரஷ்யா, மற்றும் புருசியா படைகளை நெப்போலியன் “டிறெஸ்டென்” என்ற இடத்தில் தோற்கடித்தான்.
- 1828 - ரஷ்யப் படை “அக்கால்சிக்” என்ற இடத்தில் துருக்கியப் படைகளை வென்றது.
- 1828 - பிரேசிலுக்கும் ஆர்ஜெண்டீனாவுக்கும் இடையில்' இடம்பெற்ற சமரசப் பேச்சுக்களில் உருகுவேய் தனிநாடாக அறிவிக்கப்பட்டது.
- 1859 - பென்சில்வேனியாவின் “டிட்டுஸ்வில்” என்ற இடத்தில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே உலகில் வெற்றிகரமாகத் தோணடப்பட்ட முதலாவது எண்ணெய்க் கிணறு ஆகும்.
- 1883 - இந்தோனீசியாவில் கிரகட்டோவா எரிமலைத் தீவு வெடித்ததினால் உருவாகிய ஆழிப்பேரலையினால் ஜாவா, சுமாத்திரா தீவுகளில் பல இடங்கள் அழிந்தன. கிட்டத்தட்ட 36,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1921 - 1916 இல் ஓட்டோமான் பேரரசுடன் போரிட்ட செரீப் உசைன் பின் அலி என்பவரின் மகனை பிரித்தானியர் ஈராக்கின் மன்னனாக ஈராக்கின் முதலாம் பைசல் என்ற பெயரில் அறிவித்தனர்.
- 1928 - போருக்கெதிராக கெலொக்-பிறையண்ட் உடன்பாட்டில் 60 நாடுகள் கைச்சாத்திட்டன.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் நியூ ஜோர்ஜியா தீவை விட்டு விலகினர்.
- 1957 - மலேசியாவின் அரசியலமைப்பு சாசனம் அமுலானது.
- 1962 - நாசா மரைனர் 2 விண்கலத்தை வீனஸ் நோக்கி செலுத்தியது.
- 1982 - துருக்கிய இராணுவ உயர் அதிகாரி அடில்லா அட்லிகாட் என்பவர் கனடாவின் ஒட்டாவாவில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1915ம் ஆண்டில் 1.5 மில்லியன் ஆர்மீனியர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கவென இத்தாக்குதலை நடத்தியதாக ஆர்மீனிய தீவிரவாதக் குழு இதற்கு உரிமை கோரியது.
- 2003 - செவ்வாய்க் கோள் பூமிக்கு மிகக் கிட்டவாக 55,758,006 கிலோமீட்டர் தூரத்துக்கு 60,000 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்தது.
- 2006 - பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாநில முன்னாள் முதல்வர் நவாப் அக்பர் பக்டி இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பிறப்புக்கள்

- 1770 - ஹெகல், ஜேர்மன் மெய்யியல் அறிஞர் (இ. 1831)
- 1876 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (இ. 1954)
- 1908 - தண்டபாணி தேசிகர், கருநாடக இசைப் பாடகர்
- 1908 - டொன் பிறட்மன், ஆஸ்திரேலியத் துடுப்பாளர் (இ. 2001)
- 1942 - வலேரி பொல்யாக்கொவ், ரஷ்ய விண்வெளி வீரர்

இறப்புகள்

- 1879 - ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர் (பி. 1795)
- 1963 - டபிள்யூ.இ.பி. டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க மனித உரிமையாளர் (பி. 1868)
- 1965 - லெ கொபூசியே, சுவிட்சர்லாந்து கட்டடக் கலைஞர் (பி. 1887)
- 1975 - முதலாம் ஹைலி செலாசி, எதியோப்பிய மன்னர் (பி. 1892)
- 1976 - முக்கேஷ், இந்தியப் பின்னணிப் பாடகர் (பி. 1923)
- 1979 - [illegible] (பி. 1900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாலயத்தில் நடேஸ்வரர் அபிஷேகம்

(சுவநகர)

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடேஸ்வரர் அபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு வரலக்ஷ்மி விரத அனுஷ்டான நிகழ்வும் நூல் கட்டுதலும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-254)

## கருத்தாடல் நிகழ்வு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் மாதாந்த முழு நிலாக் கருத்தாடல் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர் தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும். (2)

# விண்ணாங்கப்பிட்டியில் மூங்கில் செய்கை



(மல்லாவி)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள விண்ணாங்கப்பிட்டி கிராமத்தில் மூங்கில் செய்கை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியக்கம்பனி ஒன்றின் இராம சுப்பிரமணியம் என்பவரினால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு மக்களின் வேண்டுகோளுக்கு அமைய மேற்படி கிராமத்தில் மூங்கில் செய்கை கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனினால் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதேவேளை அச் செய்கையினை மேற்கொள்வதற்கு நெடுங்கேணிப்பகுதியில் இடம் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிர் செய்கை மூலம் முதல் கட்டமாக ஒரு ஏக்கருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வருமானமாக ஈட்ட முடியும்.

அந்த வகையில் மூங்கில் மரத்தின் கிளையிலிருந்து சேதனப்பசளை காளான், மண்புழு போன்றவற்றையும் உற்பத்தி செய்து ஏனைய பயிர் செய்கைகளுக்கு பசளையாக வழங்க முடியும். இப்பிரதேசம் விவசாய கிராமமாக இருப்பதனால் விவசாயிகள் இச் செய்கையினை தமது பிரதேசத்துக்கு உகந்ததாகக் கருத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# 50 கல்விக்கோட்டங்களில் 500 ஆசிரியர் விடுதிகள் அமைப்பு

### -மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு -

(மல்லாவி)

உலக வங்கி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்கள் உட்பட நாடு தழுவிய ரீதியில் முதல் கட்டமாக 50 கல்விக் கோட்டங்களில் 500 ஆசிரியர் விடுதிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நாடு தழுவிய ரீதியில் கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் தங்கி இருந்து கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆசிரியர் விடுதிகள் வசதி இன்மை காரணமாக ஆசிரியர்களை கடமைக்காக அனுப்பி வைப்பது மிகவும் சிரமமான காரியமாகவுள்ளது. இதற்கு தீர்வு காணும் நோக்கில் ஆசிரியர் விடுதிகள் வலய மட்டம், கோட்ட மட்டம் ஆகியவற்றில் அமைக்கப்படவுள்ளது. இதன் முதல் கட்டமாக 50 கல்விக் கோட்டங்களில் சுமார் 500 ஆசிரியர் விடுதிகளை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக நிதி அனுசரணையை உலக வங்கி, அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட முன்னணி வர்த்தக நிறுவனங்களும் வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

மிக விரைவில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கல்வி அமைச்சு நிதியனுசரணையாளருடன் நடத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

### குளக்காணிகளில் குடியேறிய

# மக்களை வெளியேற்றும் நடவடிக்கை இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியா பம்பைமடு கமநல சேவைகள் திணைக்களத்தின் காணி களில் வசிக்கும் மக்கள் தம்மை காணிகளிலிருந்து வெளியேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 24 ஆம் திகதி காலை வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக திரண்டனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நீண்டகாலமாக குறித்த காணிகளில் தங்கியிருக்கும் மக்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் வழங்கப்பட்ட காணி அனுமதிப் பத்திரம், தாம் குடியேறிய காலப்பகுதியிலிருந்து அரசாங்கத்துக்கு செலுத்திய பணத்திற்கான சோலைவரிச் சிட்டை, மின்சாரக் கட்டண சிட்டை போன்ற பல எழுத்து மூல ஆதாரங்களை எடுத்து வந்திருந்தனர்.

இதன்போது மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்திருந்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஊடாக குறித்த விடயத்தை வவுனியா அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

வவுனியா கூமாங்குளம், உக்கிளாங்குளம், வைரவர் புளியங்குளம் பகுதியில் கமநல சேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான குளக்காணிகளை மக்கள் சட்டவிரோதமாகப் பிடித்து நீண்டகாலமாக நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த வாரம் பம்பைமடு கமநல சேவைகள் திணைக்களத்தினால் குறித்த குளங்களுக்கு சொந்தமான காணிகளை விட்டு வேறு இடங்களுக்குச் செல்லுமாறு குறித்த கிராமத்தில் உள்ள 65 குடும்பங்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் இந்த விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாகத் தெரிவித்தார்.

மேலும் குளங்களுக்கு உரித்தான காணிகள் குடியேற்றங்களாக மாறியமையால் வவுனியாவின் நிலக்கீழ் நீர்வளம் பாதிக்கப்பட்டு வரட்சி ஏற்பட்டு வரும் நிலையைக் கவனத்தில் கொண்டு இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி விரைவில் இதற்கான தீர்வை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் மாவட்ட செயலகத்திலிருந்து கலைந்து சென்றனர். (2-250)




# ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இனந்தெரியாதவர்களின் நடமாட்டங்கள் குறைக்கப்படும்

### மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

மன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 42 கிராம அலுவலகர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், ஆகியோருக்கும் மன்னார் பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ எம்.எம். விக்கிரமசிங்கவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றது.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மேற்படி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இடம் பெறும் குற்றச்செயல்கள், சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களால் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து அவற்றினைத் தடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மக்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு இரவு நேரங்களில் குறிப்பிட்ட இடங்களுக்கு பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து இனம் தெரியாதவர்களின் நடமாட்டங்களைக் குறைப்பதாகவும் இவ்விடயங்களில் கிராம அலுவலகர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விழிப்புடன் செயற்படுமாறு மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (2-281)

# எமது சொந்த நிலங்களில் குடியேறுவதற்கு துரிதகதியில் செயற்பாடுகளை முன்னெடுங்கள்

### பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மீள்குடியமர்விற்கு அனுமதிக்கப்படாத பகுதிகளில் துரிதகதியில் அதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னரான மீள் குடியமர்வுகள் கடந்த 2009 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு 80 வீதமான பகுதிகள் மீள்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் முகமாலைப் பகுதியில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளும் பரவிப்பாஞ்சான், இரணைதீவு ஆகிய பகுதிகள் இதுவரை மீள் குடியமர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளன.

இதனால் இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக நலன்புரி நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி நகரின் பரவிப்பாஞ்சான் மருதநகர் மக்கள் கிளிநொச்சி நகரின் பல பகுதிகளிலும் அதிகூடிய வாடகை மற்றும் முற்பணம் ஆகியவற்றைசெலுத்தி போதிய வசதிகளற்ற் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இதேபோன்று 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியேற்றப்பட்ட இரணைதீவு கடற்தொழில் கிராம மக்கள் இடம்பெயர்ந்து இன்று 25 வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களுக்குச் சென்றுவர முடியாததுடன் அங்கு தொழில் செய்ய முடியாது வறுமையில் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முகமாலைப்பகுதியில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளில் வெடிபொருட்கள் அகற்றும் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக இதுவரை மீள் குடியமர்விற்கு அனுமதிக்கப்படவில்லை.


இந்நிலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்று வரை தமது சொந்த நிலத்தில் குடியமர முடியாது பெரும் சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம்-கந்

# அருள்மிகு ஆத்திசூடி
# ஆலய பிரதிஷ்டா ம
# சிறப்புமலர்-2



## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச்செய்தி

எல்லாம்வல்லசுந்தர்மப்பதியினிலே வேண்டுபவர்க்கு வேண்டும் அனைத்தையும் வழங்கி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஆத்தி சூடி சித்தி விநாயகப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான மன்மத வருடம் ஆவணித்திங்கள் 10 ஆம் நாள் (27.08.2015) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 9.20 மணிவரையுள்ள உத்தராட நட்சத்திரமும் சுக்கிர காலவோரையும் கன்னி இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழ்வதை எண்ணி பெருமிதமடைகின்றேன். இந்தக் கும்பாபிஷேகத்தின் பலனாக இலங்கைத் திருநாட்டின் அனைத்து இன மக்களும் சகல செல்வங்களுடனும் மன அமைதியுடனும் வாழ வேண் டும் என்று எல்லாம்வல்லசித்திவிநாயகனை வேண்டுகின்றேன்.

**பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார், சிவஸ்ரீ முத்துஸ்ரீநிவாசக் குருக்கள், பிரதம குரு, நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில்**



## ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே

இன்றைய நாள் பொன் ஏட்டிலே வரைந்து போற்றிப் பாதுகாக்க வேண் டிய நாள். ஏனெனில் யாழ்ப் பாண மாநகரில் புதிதாக ஆலயம் அமைத்து இந்து சமயம் வாழவும் இந்து சமயப் பண்பாடுகளை பாதுகாக்கவும் மாதா பிதா குரு வழிபாடுகளை எல்லோர் உள்ளத்திலும் நிலை நிறுத்துவதற்காக ஆலய பரிபாலன சபையின ரும் திருப்பணிச் சபையினரும் பொது மக்களோடு இணை ந்து மஹா கும்பாபிஷேகம் செய்யும் நாள் இன்றாகும். இந்நன்னாளில் சித்தி விநாயக அடியார்கள் யாவரும் சகல நலன் களும் பதினாறு பேறுகளும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும் என்று சித்திவிநாயகன் பாதம் பணிந்து நல்லாசி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

**சர்வபோதகாச்சாரியார் இ.இராமலிங்க சர்மா, முன்னாள் தேவஸ்தான குரு, ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**



## தேவஸ்தான குருவின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் கந்தர் மடம் பதியி னில் எழுந்தருளி சகல அடிய வர்கள் வேண் டும் வரம் தன்னை வழங்கி வருகின்ற ஸ்ரீ ஆத்திசூடி சித்தி விநாய கப் பெருமானுக்கு நிகழும் மங்க ளகரமான மன்மத வருடத்தில் புதி தாக ஸ்தாபிக்கப்பட்ட அதி உன்னத சிறப்புடைய ஆலயமாக பிரகாசிக்கின்ற காட்சியை நாம் இன்று கண்குளிரக் காண்கின்றோம். இந்தக் கும்பாபிஷேகத்தின் பலன் எல்லா அடியவருக் கும் அந்நிய தேசத்தில் இருக்கின்ற சித்தி விநாயகர் அடியார்களுக்கும் விக்னேஸ்வரப் பெருமானின் அருள்கிடைக்க வேண்டும் என்று எல்லாம்வல்ல விநாயகரை வேண்டி நிற்கின்றேன்.

**செ.பாஸ்கரசர்மா, தேவஸ்தான குரு, ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**



## சங்கத் தமிழ் மூன்றும் தா

விநாயக அடியார்களே!
பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலஞ்செய் துங்கக் கரிமுகத்து-தூமணியே
நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா

இந்தப் பாட்டிற்கமைய பக்தி, பொற்செல்வம், அருட்செல்வம் ஆகியவற்றை அடியார் களுக்கு கொடுத்து அடியார்களை நோய் நொடியில்லாமல் காத்த ருளுகின்ற ஆத்திசூடி விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண் டிருக்கின்ற இந்நேரத்தில் விநாய கரை வணங்கி ஆசி வழங்குகின்றோம்.

**க.சுரேந்திரசர்மா**

## விநாயகரின் 16 திருநாமங்கள்

பாலகணபதிள, தருண கணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிஜ கணபதி, சித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்னராஜா கணபதி, க்ஷிப்ர கணபதி, ஹேரம்ப கணபதி, லட்சுமி கணபதி, மகா கணபதி, புவனேச கணபதி, நிருத்த கண பதி, ஊர்த்துவ கணபதி



## ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறு

இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன் இப்பகுதியில் வாழ்ந்த பக்தர்கள் இந்து மகளிர் கல் லூரியில் அமையப் பெற்றுள்ள **நடுத்தோட்டத்துப் பிள்ளையாரை** வழிபட்டு வந்தார்கள். காலப் போக்கில் கல்லூரி நிர்வாகம் கல்லூரி எல்லையைச் சுற்றி மதிலை அமைத்தார்கள். இதனால் வெளி யார் சென்று வணங்க முடியாத நிலை ஏற்பட்டது. விநாயக பக்தர்கள் ஆலய வாசலுக்கு நேராக கல்லூரி மதிலுடன் கல்லையும் வைரவர் சூலத்தையும் வைத்து வணங்கி வந்தார்கள். ஆலயத்தின் முன் வளவில் குடியிருந்த திரு.முத்தையாவின் பேரன் வாசன் என்பவர் சாண்டோ முத்துச்சா மிப்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்ட விநாயகர் விக்கிரகத்தை எடுத்து வந்து மக்களின் தரிசனத்திற்கு வைத்தார். இப்பிள்ளையார் சிலை இந்தியாவிலிருந்து சட்டநாதர் சிவன் கோவிலுக்கு எடுத்து வரப்பட்ட சிலைகளில் ஒன்றாகும்.

ஆத்திசூடி வீதியில் அமைக்கப்பெற்றிருந்த புகையிரத தண்டவாளத்திற்கு அருகில் ஒரு மதிலுடன் கூடிய சிறு குடிலில் இவ்விநாயகரும் வைரவரும் அருள் பாலித்து வந்துள்ளனர். வெளிநாடு செல்ல விரும்பி வழிபடும் அடியவருக்கு எவ்வித இடையூறுமின்றி அப்பணியை நிறைவேற்றுவதனால் இவருக்கு **வெளிநாட்டுப் பிள்ளையார்** என்ற செல்லப்பெயரும் உண்டு. 1987 ஆம் ஆண்டு ஆவணித் திங்களில் புதிதாக ஆலயம் அமைக்க இவ்வூர் மக்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

அதனைத் தொடர்ந்து புனருத்தாரண வேலைகள் நடைபெற்று விநாயகப் பெருமானுக்கும் வைரவப் பெருமானுக்கும் ஸ்தூபியுடன் கூடிய கலை எழில் மிக்க ஆலயம் ஒன்றை அமைத்து முதலாவது மஹாகும்பாபிஷேகத்தை விபவ வருஷம் ஆவணித் திங்கள் 30 ஆம் நாள் (15/9/1988) வியாழக்கிழமை நடத்தினார்கள். விநாயகப் பெருமானின் அருளி னால் 1993-1994 ஆம் ஆண்டு களில் வசந்த மண்டபமும் மணிக் கோபுரமும் அமையப் பெற்றது குறிப்பிடத்தக்கதொன் றாகும். முதல் கும்பாபிஷேகம் நடைபெற்று 13 வருடங்களின் பின்னர் இரண்டா வது மஹாகும் பாபிஷேகம் விஷஷ வருடம் ஆவ ணித் திங்கள் 14 ஆம் நாள் வியா ழக்கிழமை (30/08/2001) சுபமே நடைபெற்றது. 2013 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை தங்கு தடை யின்றி நடைபெற்று வந்த இவ்வாலயப் பணிகள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு புகை

யிரதம் வ... கடவையி... வழிபட ... அமைவி... வாங்குவ... பரிபாலன...
அத... தேவைய... வாங்கு வ... 2014 ஆ... கட்டப்ப... மாசி மா...
மிகத்... செய்த... பிரகாரம்... நாள் ந... இன்று ... நட்சத்திர... எம்பெரு... கும்பாபி... பெருவி... றோம்.


சிவகணேசன் டெக்ஸ்ரைல்ஸ்
Wholesale & Retail Dealers in Textiles. Specialist in wedding Sarees
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் - 021 222 2063

கணேசன் ஸ்ரோர்ஸ்
KANESAN STORES Wholesale & Retail Dealers in Textiles
201, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் 021 222 2830

ஸ்ரீராஜன் பான்சி ஹவுஸ்
அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்
63,65,66, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 021 222 4327

Kugan Copyist
214, B, Ramanathan Road. Thirunelvely.

அபிராமி சைவ உணவகம்
212, இராமநாதன் வீதி, திருநெல்வேலி
077 438 3177

கஜன் களஞ்சியம் & கஜன் அரைக்கும் ஆலை
இல.2,4, இந்து மகளிர் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

மாருதி ரேடிங் சென்ரர்
(General merchants & Commission Agents)
16 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாகோ களஞ்
Maho Stores
97 C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2818

காந்தி மோட்டோர்ஸ்
(வாகன உதிரிப்பாக மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்)
66, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2136

New Modern Styles
34, New, Market Inside, Jaffna.
077 266 0245

சிவன் ஸ்ரோர்ஸ்
241, இரமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 8116

யாழ்ப்பாண இரும்பகம்
32, ஸ்ரான்லி வீதி, யா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கந்தர்மடம்
# டி ஸ்ரீசித்தி விநாயகர்
# மஹாகும்பாபிஷேக
# 27.08.2015





## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் உள்ளத்திலிருந்து...



இன்றையதினம் ஆத்திசூடிப் பதியினிலே வீற்றிருந்து பக்தர்களுக்குத் தனது கருணை மழை யைப் பொழிந்து வரும் ஸ்ரீ சித்தி விநாயகரது புதிய ஆலயம் திருக்குட முழுக்குக் காணும் நாள். இது கந்தர் மடம் வாழ் மக்களது வாழ்வில் மறக்க முடியாத பக்திபூர்வ மான ஒரு இனிய நாளாகும். இன்று குடமுழுக்குக் காணுகின்ற இந்தப் புதிய ஆலயம் முழுக்க முழுக்க அடியவரது நிதியுதவியினாலேயே அழகுறக் கட்டப்பட்டுள்ளது. இன்று நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வழகிய ஆலயம் பக்தர்களின் நீண்டநாள் கனவை நனவாக்கி தற்போதைய சூழ்நிலையில் பக்தர்கள் மிகவும் அமைதியான முறையிலும் பக்திபூர்வமாகவும் நின்று வழிபடக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இந்தப் புதிய ஆலய நிர்மாணம் பலரின் கூட்டு முயற்சியினாலேயே கட்டப்பட்டுள்ளது. பல்வேறு தரப்பினரும் தம்மாலான உதவிகளை மனமுவந்து செய்துள்ளனர். இவ் வாலயத்தை நிர்ணயிப்பதற்கும் இன்று நடைபெறவுள்ள திருக்குடமுழுக்கை இனிதே நிறைவு பெறச் செய்வதற்கும் உதவிய அனைவருக்கும் உலகமெங் கும் பரந்து வாழும் விநாயகப் பெருமானின் பக்தர்களும் இந்தச் சந்தர்ப் பத்திலே ஆலய பரிபாலனர் மற்றும் திருப்பணிச் சபையினர் சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். **வேழமுகத்து விநாயகனைத் தொழ வெவ் வினை அறுமே** என்ற முது மொழிக்கமைய எம்பெருமான் ஸ்ரீ சித்திவிநாய கரை வணங்கி நல்லருள் பெறுவோமாக

**கலாநிதி கதிரவேலு தபோதரன், தலைவர், பரிபாலன சபை, ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

## திருப்பணிச் சபைத் தலைவரின் எண்ணக் கருவிலிருந்து...



எல்லாம்வல்ல ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் அழகிய புதிய கலை வேலைப்பாடுகள் நிறைந்த ஆகமவிதிப்படி அமையப்பெற்ற ஆலயத்திலே நடைபெறுகின்றது. இது எம்பெருமானின், என்னைப் போன்ற நித்திய அடியார்களின் நீண்ட நாள் கனவு ஈடேறும் ஒரு இனிய நாளாகும். எந்த ஒரு கருமத்தை ஆரம் பிப்பதற்கு முன்னரும் எம்பெருமானை ஒருகணம் மனதில் நிலைநிறுத்தி அவரைப் பூரண மனதுடன் வேண்டிக் கொண்டால் எடுத்த காரியம் பூரண சித்தியடையும் என்பது எனது சொந்த அனுபவத்தில் கண்ட அனுபவ தரிசனமாகும். இத்தகைய சிறப்புக்கள் நிறைந்த விநாயகர் தம்மை வழிபடும் அடியவர்கள் அனை வரையும் வாழ்க்கையில் மிகச்சிற ந்த நிலைக்கே கொண்டு செல்பவரா வார். அவரின் பாதார விந்தங்களைப் பணிவுடன் பற்றிக்கொண்டு முழு மனது டன் இந்தப் புண்ணிய நாளில் மனம் நிறைய வேண்டிக்கொ ண்டால் எடுத்த காரியம் சித்தியடையும், வாழ்க்கை மேம்படும், செல்வம் பெருகும். இன்றைய தினம் கும்பாபி ஷேகம் காணும் இந்த அழகிய ஆலயத்தை எம்முடன் இணைந்து நிர்மாணிப் பதற்கு உதவிய அனைவருக்கும் ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் என்ற வகையில் எனது மன மார்ந்த நன்றிகளையும் வாழ்த் துக்களை யும் இந்தத் தருணத்திலே மனமு வந்து தெரிவித்துக்கொள்கின்றேன். விநாயகரின் நல்லருள் உங்கள் அனைவருக்கும் கிடைக்க எம்பெருமானை வேண்டிக் கொள்கிறேன்.

**இறை திருப்பணியில் சதாசிவம் அற்புததேவராசா, தலைவர், ஆலய திருப்பணிச்சபை, ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

## வாரி வழங்கிய வள்ளல்களுக்கு இறைவன் திருவருள் கிடைக்கட்டும்!



கந்தர்மடம் ஆத்திசூடி வீதி யில் அமர் ந்து இப்பிர தேச மக் களுக்கு அருள்பாலித்து வருகின்ற ஸ்ரீ சித்தி விநாயகருக்கு 2015 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 27 ஆம் நாள் புதிதாக நிர்ணயித்த ஆலயத்தினுள் புனருத்தாரண கும்பாபிஷேகம் செய்ய திருவருள் கூடி யுள்ளது. அத்தருணம் இவ்வாலயம் சிறப்புற கட்டியமைக்க பொரு ளுதவி, நிதியுதவி தந்து உதவி செய்த அனைத்து பக்தர்களும் இதில் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருளைப் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்த 6 மாதகாலமாக இறைவனின் திருப்பணிக்காக மனமுவந்து இன்னும் என்ன தேவை, தருகிறோம் என்ற மனப்பா ங்குடன் நிதியுதவி செய்த அனைத்து உள்ளூர், வெளியூர் பக்தர்களுக்கும் எமது நன்றியைப் பொருளாளர் என்ற வகையில் தெரிவித்துக் கொள்கி ன்றேன்.

**அ.சிவராசா, பொருளாளர், பரிபாலன சபை, ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

## மிகக் குறுகிய காலத்தில் அழகிய ஆலயத்தை நிர்மாணித்துள்ளோம்



கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் புகையிரதக் கடவையின் அருகில் இருந்து மக்களுக்கு அருள்பாலித்து வந்த ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானுக்கு இன்று அழகிய ஓர் ஆலயம் அமையப் பெற்றிருப்பது எம்பெருமானின் கருணையினாலேயாகும். பக்தர்களின் சரீர, நிதி உதவியினாலும் எம்பெருமானின் கருணையினா லும் மிகக்குறுகிய காலத்திலேயே இவ்வழகிய ஆலயத்தை அமைக்க உதவிய அனை த்து மக்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இவ்வாலயத்தில் இன்று நடைபெறும் புனருத்தாரண கும்பாபிஷேக நிகழ்வி லும் அதனைத் தொடர்ந்து 24 தினங்கள் நடைபெ றும் மண்டலாபிஷேகத்திலும் அடியார்கள் அனைவ ரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பு.மோகன்ராஜ், செயலாளர்/ பரிபாலன சபை, ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

யிரதம் வரத் தொடங்கியதை அடுத்து நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டது. புகை யிரத கடவையின் மேல் கட்டப்பட்ட மேலதிக கட்டடங்கள் இடிக்கப்பட்டு பக்தர்கள் தண்ட வாளத்தின் மேல் நின்று வழிபட வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அத்தரு ணத்தில் இவ்வாலயத்திற்கு ஒரு நிரந்தர அமைவிடம் தேவையென்பதனை ஊர்மக் கள் ஏகமனதாக தீர்மானித்து ஒரு காணியை வாங்குவதற்கான முயற்சி களை மேற்கொண்டனர். இதன்பயனாக புதிதாகப் பொறுப்பேற்ற பரிபாலன சபையி னர் நிதி திரட்டும் பணியில் துரிதமாக ஈடுபட்டனர்.

அதன் பயனாக 2014 ஆம் ஆண்டு சித்திரை மாதம் தொடங்கிய பணி 2 மாதங்களிலேயே தமக்கும் தேவையான 50 இலட்சம் ரூபா நிதியினைத் திரட்டி ஆலயத்திற்கு அருகிலேயே 2 பரப்புக் காணியை வாங்கு வதற்குவிநாயகப்பெருமானின் அருள்கிடைக்கப்பெற்றது. அக்காணியில் ஆலயம் அமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டு ஆடி மாதம் 4 ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்டடப் பணிகள் அராலியூர் சிற்பாச்சாரியார் கோபாலரத்தினம் அவர்களினால் 2014 ஆம் ஆண்டு மாசி மாதம் 22 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது.

மிகத் துரிதகதியில் 6 மாத காலப் பகுதியில் மிக அழகிய இவ்வாலயத் தினை நிறைவு செய்த[illegible]ன் பாலஸ்தாபனம், கும்பாபிஷேகத்திற்கும் நாட்கள் குறிக் கப்பட்டன. அதன் பிரகாரம் இவ்வாலயத்தின் 3 ஆவது பாலஸ்தாபனம் 2015 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆம் நாள் நடைபெற்று மஹாகும்பாபி ஷேகம் 2015 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் இன்று வியாழக் கிழமை காலை 8 மணி முதல் காலை 9.20 மணி வரையுள்ள உத்திராட நட்சத்திரமும் சுக்கிரகால ஓரையும் கன்னி லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் நடைபெறுவதற்கு எம்பெருமா னின் திருவருள் கைகூடியுள்ளது. விநாயகப் பெருமான் அடியார்கள் யாவரும் கும்பாபிஷேகப் பெரு விழாவையும் அதன்பின் 24 தினங்களு க்கு நடைபெறும் மண்டலாபிஷேக பெருவிழாவிலும் கலந்து எம் பெருமானின் அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுபம்

ist
ad.

Shanmuga Texware
The men's Collection
No.19,20,98,99,
New Market west,
Jaffna.
077 852 8100

கிருபா லேணர்ஸ்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
L
021 222 4353,
021 492 3200

ஆர்.கே.மோட்டோஸ்
R.K.MOTORS
Dealers in Tractor &
Motor spare parts Hardware &
General Merchants
17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2345

ளஞ்சியம்
res
வீதி,

Banuja Fancy House
அன்பளிப்புப் பொருட்கள்
மற்றும் அழகுசாதனப்
பொருட்கள்
19, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

கஜமுகன் ஹாட்வெயர்
Leading Hardware
merchant in jaffna
pennisulla
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2833

சானுகா நகை மாடம்
64 D, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3700,
021 222 4687

ரண
ம்
, யாழ்ப்பாணம்.

அற்புதா
ரேடிங் கொம்பனி
199, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Nalin Information
Technologies (Pvt) Ltd
195/2 Parameswara
junction,Palaly Road,
jaffna.
021 222 1121

வேணி
ஸ்ரோர்ஸ்
165, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 567 3533 / 021 222 2046


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கும் சமஷ்டி தீர்வும்

## செய்தவையும் செய்யக்கூடியவையும்

சமஷ்டி அமைப்பை முதன் முதல் 1956 இல் பண்டார நாயக்க முன்வைத்தார்.

முதன் முதல் சமஷ்டித் தீர்வை இந்த நாட்டில் அறி




முகம் செய்தவர்- ஜி ஜி பொன னம்பலமோ, செல்வநாய கமோ, சுந்தரலிங்கமோ, அல்ல.

தமிழ்த் தலைவர்கள் அதுபற்றி யோசிக்கவில்லை.

பருத்தித்துறையிலிருந்து சட்டசபை சென்ற பாலசிங்கம் மகாவலியை வடக்கிற்கு அனுப்பக் கேட்டார்.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்ற நிதிப் பெரு நிறுவ னத்தையும் தொழிலாளர் நலன் பெறு வசதித் திட்டங் களையும் ஐக்கிய இலங்கை க்கு உருவாக்கிய மூலமாகத் திகழ்ந்தவர் அவர்.

பருத்தித்துறையிலிருந்து மக்கள் இடதுசாரி பொன் கந்தையாவை அனுப்பி வைத்தனர்.

ஆனாலும் தேவேந்திர முனைக்கு தமிழ் மக்களின் ஒன்றிணைந்து வாழும் குரல் கேட்கவில்லை.

தமிழ் மக்கள் இவர்களை அனுப்பி வைத்த போதெல்லாம் சமஷ்டி என்ற சொல்லையே கேள்விப்பட்டதில்லை கேட்கவு மில்லை.

இந்தத் தமிழ்த் தலைவர் கள் சமஷ்டி என்பதைப் பற்றி ஒருபோதும் வாய் திறக்க வுமில்லை.

தம் மக்களுக்கு சொல்லிக் கொடுக்கவுமில்லை.

இந்தச் சொல்லை இலங் கையிலேயே முதலில் அறிமுக மாக்கி வைத்தவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் பண்டாரநாயக்க.

ஆனால் அவர் இந்தக் கருத்தை முன்வைத்தது 1926 இல் ஆகும்.

ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகத்தில் கல்வியை முடித்து வந்த நிலையில் அவர் இதனை இந்த நாட்டிற்குப் பொருத்தமான அரசியல் முறைமை எனச் சொன் னார்.

வடகிழக்கிற்கு ஒரு தமிழ் அரசு. மத்திய பகுதிகளுக்கான அரசு, கரையோரப் பகுதி களுக்கான ஓர் அரசு என மூன்று சமஷ்டி ஆட்சிகள் இலங்கையில் ஏற்பட வேண்டும் என அவர் கருதினார்.

இதன் மூலம் அதிகா ரப் பரவலாக்கத்தை அவர் ஏற்றுக் கொண்டார்.

பண்டாரநாயக்க- செல்வ நாயகத்துடன் ஒப்பந்தம் செய்த வேளையில் (அன்றைய) ஐக்கிய தேசியக் கட்சி முதன் முதலாக வடக்குக் கிழக்கு மாகாணங்களை கறுப்பு மையால் தீட்டி பண்டாரநாயக்க நாட்டை விற்றுவிட்டார் என்று பிரசாரம் செய்தது.

தமிழரசுக் கட்சிக்கு முன் னரே வடக்குக் கிழக்கு மாகா ணங்களுக்கு "மை தீட்டியவர் கள்" சிங்களக் கட்சிகளே .

விடுதலைப் புலிகளின் "சோசலிச தமிழ் ஈழம்" என்ற முதலாவது நூலில் "தமிழ் ஈழம்" என்ற வடிவத்தில் வரலாற்றுத் தமிழ் மண்ணை வடகிழக்குடன் இணைத்து மை தீட்டப் படுவதற்கு முன்னர் ஒரு கட்சி மீது காழ்ப்பை ஏற்படுத்துவதற் காக தமிழ் ஈழம் என்ற வரை படத்தை அவர் களே மை தீட்டிக் காட்டிவிட்டன.




இன்று தமது கட்சியொ ன்றின் வேட்பாளர் அப்படி மை தீட்டி விட்டார் என்று தமக்குள் அடிபடுகின்றன.



1956 இலும் 1977 இலும் 1983 இலும் தென்னிலங்கையிலும் மலையகத்திலும் இடம் பெற்ற கலவரங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை இந்த "மை தீட்டிய" பிரதேசங்களுக்கே ஆட்சியிலிருந்த இக் கட்சிகள் அனுப்பி வைத் தன.

எனவே 1926 இல் பண்டாரநாயக்க அவர்கள் சொன்ன வடகிழக்கு



என்ற சமஷ்டி அலகின் தனித் துவத்தையும் பொருத்தப் பாட்டையும் அவர் சொன்ன காலத்திற்குப் பின்னர் இடம் பெற்ற இன முரண் பாட்டு நிகழ்வுகள் நிரூபித்துள்ளன.

அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கை களில் மகிந்த ராஜபக்ஷவின் பிரசார முக்கியத்தராகத் திகழ்ந்த தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன் னணி விடுதலைப் புலிகளுடன் முன் பொருமுறை ஒரு உடன் பாட்டிற்கு வந்திருந்தனர்.

மறைந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம் பலத்தினூடு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சமஷ்டியை இந்த நாட்டிற்குப் பொருத்தம் என முதலிற் பேசிய அமரர்



பண்டாரநாயக்கவின் புதல்வரும் இன்று தேசிய நல்லிணக்க செயற் திட்டங்களில் மும்முரமாக ஈடுபட்டுவரும் சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் சகோதரரு மான அனுர பண்டார நாயக்கவும் புலிகளுட னனான இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

எஸ்.எம்.வரதராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா - இலங்கை உறவு பலப்படுத்தப்படும்

## அமைச்சர் மங்கள சமரவீர நம்பிக்கை

(கொழும்பு)

**இலங்கை மற்றும் அமெரிக்க நாடுகளுக்கிடையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகளை நடைமுறைக்கு கொண்டுவந்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவைப் பலப்படுத்துவதே எமது சந்திப்பின் நோக்கம் என வெளி விவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

இலங்கை வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஷ்வாலுடன் நேற்று முன்தினம் இரு தரப்பு சந்திப்பை நடத்திய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் இச் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின் பின்னர் அமைச்சர் சமரவீர தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,



கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட மாற்றத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னை வெளிவிவகார அமைச்சராக நியமித்துள்ளார். நான் வெளிவிவகார அமைச்சராக பதவி ஏற்ற பின்னர் எனது உத்தியோகபூர்வ சந்திப்பினை அமெரிக்க இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வாலுடன் மேற்கொண்டுள்ளேன், இந்த சந்திப்பானது இரு நாடுகளுக்குமிடையிலான உறவினை பலப்படுத்தும் வகையில் அமையப் பெற்றுள்ளது. குறிப்பாக முன்னைய காலங்களில் நாம் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு மற்றும் உடன்படிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வது தொடர்பில் நாம் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தோம்.

கடந்த மே மாதம் அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரி இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த நிலையில் அவருடனான பேச்சுவார்த்தையின போது பல வெற்றிகரமான முன்னேற்றங்களை கண்டிருந்தோம். அதை தொடரும் வகையில் இப்போது இரண்டாம் கட்டமாக இந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம். கடந்த காலங்களில் வெறுமனே பேச்சுவார்த்தைகளில் மாத்திரமே இரு நாடுகளின் செயற்பாடுகளும் நகர்ந்தன. ஆனால் பேச்சுவார்த்தைகளை செயற்பாடுகளாக மாற்றும் வகையிலேயே இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

மேலும் நாட்டில் சுயாதீனமான தேர்தல் நடவடிக்கைகள் நடைபெற வேண்டும் எனவும், மனிதவுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தார்.

அதற்கமைய இம்முறை அமைதியானதொரு தேர்தல் நடைபெற்றுள்ளது. அதேபோல் கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்திருந்த நல்லாட்சிக்கான வேலைத்திட்டம் மற்றும் நாட்டின் சுயாதீன நீதிச்சேவை, மனிதவுரிமைகளை பாதுகாத்தல் தொடர்பிலான அடுத்தகட்ட வேலைத்திட்டங்களை இன்றைய பேச்சுவார்த்தையில் நாம் கலந்துரையாடினோம்.

மேலும் இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பொருளாதார நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானதாகும். இரண்டு நாடுகளும் மிகவும் நெருக்கமான பொருளாதார உறவினை பேணி வருகின்றன. இலங்கையின் ஏற்றுமதியில் அதிக பங்கு அமெரிக்காவை சார்ந்தேயுள்ளது. இலங்கையின் மொத்த ஏற்றுமதி சந்தையில் 23 வீத பங்கினை அமெரிக்காவே பெறுகின்றது. எனவே நாம் எமது வர்த்தக உறவினை மேலும் பலப்படுத்தவும் இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார அபிவிருத்தியை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமெரிக்க முதலீட்டார்கள் வர வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இலங்கை மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு இடையல மிகவும் நெருக்கமான உறவுகள் இருந்து வருகின்றன. அந்த உறவினை மேலும் பலப்படுத்தும் வகையில் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொன்சேகா - ஞானசார தேரர் தோல்வி; சிறந்த ஜனநாயகத்தின் வெளிப்பாடாகும்

இராணுவ ரீதியான சிந்தனைகளைக்கொண்ட சரத் பொன்சேகாவும், இனவாத சிந்தனை கொண்ட ஞானசார தேரரும் தோற்கடிக்கப்பட்டுள்ளமை சிறந்த ஜனநாயகத்தின் வெளிப்பாடாகும் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரும், புதிய இடதுசாரி முன்னணி கட்சியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்க சுதந்திரக்கட்சி எடுத்த முடிவு தவறானது. சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்த மக்களின் மனோநிலை மற்றும் சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் என்பவற்றின் அடிப்படையில் இது தவறானது. அது பொதுமக்களின் வாக்குப் பலத்தை பலவந்தமாக சிதைப்பதற்கு ஒப்பானது.

எனவே இதனை எதிர்த்து எதிரக்கட்சியாக செயற்பட தீர்மானித்துள்ளோம்.

தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் ஐக்கிய தேசியக்கட்சி அதன் முதலாளித்துவ கொள்கைகளையே தொடர்ந்தும் முன்னெடுக்கும். அதற்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படல், தேர்தல் சட்டங்களில் சீர்திருத்தம், தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றிக் கொள்ள கிடைத்தால் அது பொதுமக்களின் வெற்றியாக இருக்கும் என வாசுதேவ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஐங்குசம் ஒன்று யானைகள் ஐந்து

மனிதன் உயர்ந்து தெய்வமாகும் வழிமுறைகளை ஸ்ரீகிருஸ்ணன் பகவத் கீதையின் பதினாறாவது அத்தியாயத்தில் விளக்குகிறார். அதில் பலவற்றை ஏற்கனவே விளக்கி இருக்கிறேன். அகிம்சை பற்றிக் கடைசியாகப் பார்த்தோம்.

இப்போது தியாகம்,புலனடக்கம்,கோள் சொல்லாமை பற்றி ஆராயலாம். அகிம்சை என்பது பெருங்கடல். புலால் உண்ணாமை கூட அகிம்சையின் ஒரு கூறு. ''தன் ஊன் பெருக்க பிறிதூன் உண்பவன் தெய்வ நிலை பெறான்'' என்று தெய்வத் திருவள்ளுவர் தீர்ப்புரைக்கின்றார்.

மாமிச உணவினர் மிக விரைவில் வன்முறை, உயிர்க் கொலை இவற்றில் இறங்கிவிடுகின்றனர். கொலைகளில் சிக்கியுள்ளவர்களை ஆய்வு செய்தால் இந்தச் செய்தி உண்மை என்று அறியலாம். வள்ளலார் போன்ற மனித தெய்வங்கள் ஜீவகாருண்யம் என்ற கொள்கையை அறிவித்து புலால் மறுத்தலை வெகுவாகப்பரப்பினர். சுத்த தேகம் என்ற ஒளி தேகம் பெற விரும்புவோர் அறவே புலால் உண்ணலாகாது என்று விளக்கினார் வடலூர் வள்ளல்.

நாள்,கிழமை,மாதம் பார்த்து மாமிசம் விலக்கி உண்பவர் சிலர். தங்களை சைவ உணவினர் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். வாரியார் சுவாமிகள் பழுத்த சைவர். சைவ உணவினர் அவரை விருந்துக்குத் தம் வீட்டிற்கு அழைத்தனர். ஓர் அசைவ அன்பர் சுவாமிகள்,தாம் அசைவம் என்பதால் வரமாட்டார் என்று கருதி நீண்ட விளக்கம் சொன்னார் அவர்.

"சுவாமி...அசைவம் சமையல்அறை வேறு...சைவ சமையல் அறை வேறு. கரண்டி கூட இங்க அங்க மாறாது சுவாமி...அரிவாள்மனை வேறு...சாப்பாடுத் தட்டு வேறு வேறு சுவாமி...சைவத்தையும் அசைவத்தையும் தனித்தனியாகப் பிரிச்சிட்டோம் சாமி" என்றார் அன்பர்.

புன்னகையோடு அவரைப்பார்த்த வாரியார் தட்டு வேற... கரண்டி வேற...அரிவாள்மனை வேற...சமையல்கட்டு வேற...எல்லாத்தையும் பிரிச்சியேப்பா...வயிறு ஒண்ணு தானே!அசைவம் சாப்பிட வேறு வயிறு...சைவம் சாப்பிட வேறு வயிறு வைச்சிருக்கியா?என்றார்.

அத்தோடு நிறுத்தாமல் ''மனிதன் செத்தா புதைக்கிற இடம் கல்லறை... இடுகாடு... ஆடும் கோழியும் செத்தா புதைக்கிற இடம் வயிறா...உம் வயிறா... அப்ப நீ நடமாடும் சுடுகாடு-கல்லறை. சரியா?'' என்று கேட்டதும் அந்த அன்பர் அழுது தொழுது அப்போதே சைவமானார்.

நாயன்மார்கள் மனிதனும் தெய்வமாக முடியும் என்பதற்கான அடையாளம். அவர்களில் பலர் தியாக புருசர்கள். கண்ணப்பர் தம் கண்ணைத் தியாகம் செய்கிறார். சிறு தொண்டர் தம் பிள்ளையையே தியாகம் செய்கிறார். இப்படிப் பல வரலாறுகள். ஒரு பறவையான ஜடாயுசீதையை இராவணன் தூக்கிச் சென்ற போது சண்டையிடுகிறது. தன் உயிரைத் தியாகம் செய்கிறது. ராமன் அந்த ஜடாயுவை வணங்கு கிறார். இயேசு பிரான் உலக மக்கள் நலம் கருதித் தன்னைத் திருப்பலி கொடுத்தார் என்கிற நம்பிக்கை தான் கிறிஸ்தவ மதத்தின்அடிநாதம். தியாகிகள் வணங்கப்படுகிறார்கள், தொழப்படுகிறார்கள்.

புலன் அடக்கம் அடுத்த தெய்வ குணமாகிறது. ஐந்து பொறிகள் அதன் வழியோடும் புலன் நுகர்ச்சி வெறி இவை அடங்கிக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஒரு கச்சேரி நடக்கிற போது பாடுபவர் பாட்டிற்கேற்ப வயலின் பின்னால் நடக்க வேண்டும். தாளம் மாறாது மிருதங்கம் ஒலிக்க வேண்டும். பாடகர் சுருதியே தம்பூராவின் சுருதியாகஇருக்க வேண்டும்.

உடம்பால் இன்ப நுகர்ச்சி என்பது உயிரினங்களின் அடிப்படை வேட்கை.எவ்வளவு வலிமையானது யாணை! அதை எப்படி பிடித்து அடிமையாக்குகிறார்கள்?பழக்கிய பெண் யானையை முன்னால் நிறுத்தி பள்ளம் வெட்டி இலை தழைகளை மேலே வைத்து மூடுவார்கள்.ஆண் யானை ஆசையோடு ஓடி வரும்.குழியில் விழுந்து விடும்.வாழ்நாள் முழுவதும் சுதந்திரம் இழந்து அடிமையாகி விடும். மெய்யின்பம் என்பது வலிமையான யானையைஅடிமையாக்கி விட்டது.அண்மைக்காலக்கவிஞானி கண்ணதாசன் கன்னியரை ஏசுதடி உள்ளம்.இது காலிடறியானை விழும் பள்ளம் என்றுபாடியது இது கருதித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக்கிண்ணம்

## யூனியன்ஸ்சை வென்றது சிறிகாமாட்சி அணி



யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யூ.ஆர்.பவுண்டேசன் 3-வது ஆண்டாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் பிரிவு II இல் சிறிகாமாட்சி அணி, யூனியன்ஸ் அணியை 48 ஓட்டங்களால் வெற்றிபெற்று தங்களது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 7 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களை பெற்றனர். தீபன்-29, துவாரகன்-36, பவீந்திரன்-27 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் யூனியன்ஸ் அணி சார்பாக சுஜன்தன், கபில்ராஜ் தலா 1 இலக்கினையும் தயாளன் 2இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்கு களமிறங்கிய யூனியன்ஸ் அணி 17.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களை பெற்றனர். சுஜன்தன்-20, கபில்ராஜ்-17 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் சிறிகாமாட்சி சார்பாக தீபநாதன்-04, ராம்-01 இலக்கினை கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 6 ஆண்டுகளாக நடத்திவரும்யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு சிறிகாமாட்சிஅணி5.04 புள்ளிகளையும் யூனியன்ஸ் அணி1.78புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது.

## கே.சி.சி.சி. அணியை வீழ்த்தியது ஹாட்லியைற்ஸ் அணி



யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யு.ஆர்.பவுண்டேசன் 3-வது வருடமாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் பிரிவு I இல் ஹாட்லியைற்ஸ் அணி கே.சி.சி.சி அணியை 26 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட் லியைற்ஸ் அணி 20 ஓவர்களில் 9இலக்குகளை இழந்து154 ஓட்டங்களைபெற்றது. கரிகரன்-30,சதீஸ்-71,தர்ஸன்-17, பிரதீப்-14 ஓட்டங்களை பெற்றனர்.

கே.சி.சி.சி அணி சார்பாக பார்த்தீபன்-03, தனலக்ஸன்-01, சாம்பவன்-02,பவிதரன்-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சி. சி.சி அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களை பெற்றனர்.

ஜெயரூபன்-56, சதீயன்-17, பார்த்தீபன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களை பெற்றனர்.

பார்த்தீபன், சன்ஜெயன், பிரசாத், சேயோன் தலா 2 இலக்கினையும் சதீஸ்-01 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தின் தரவரிசை பட்டியலுக்கு ஹாட்லியைற்ஸ்அணி4.70புள்ளிகளையும் கே.சி.சி.சி அணி 2.18 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (க)

## நவசக்தி வி.கழகத்தை வீழ்த்தியது நெடியகாடு இளைஞர் கழகம்






நெற்டிகாழு கழுகுகள் வி.க. நடத்தும் வடமாகாண ரீதியான உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து நவசக்தி வி.க. மோதின. இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்கள் அமைந்த போதும் அதனை சரிவர பயன்படுத்தாது ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதனால் ஒவ்வொரு அணிக்கும் தலா 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

போட்டியின் சிறந்த வீரராக பகீரதன் தெரிவு செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்கள் பதக்கத்தினையும் பணப் பரிசினையும் வழங்கி கௌரவித்தார். (க)

## நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த உதைபந்து



(யாழ்ப்பாணம்)

நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் உதைப்பந்தாட்ட தொடரின் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டி முடிவுகள்.

முதல் போட்டியில் வல்வை நேதாஜி விளையாட்டு கழகத்தை எதிர்த்து வல்வை உதய சூரியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் கோல் எதனையும் போடாத நிலையில் போட்டி சமனிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது போட்டியில் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிாத்து வல்வை தீருவில் விளையாட்டுக் கழகம் மோதியது.

போட்டியின் ஆட்ட நேர முடிவில் சைனிங்ஸ் விளையாட்டுக் கழ கம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## இன்றைய போட்டி

நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளங்கதிர் அணி மோதவுள்ளது. (க)

### கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் 0778937288, 0772269817 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு இலட்சம் அகதிகள் ஹங்கேரிக்கு படையெடுப்பு

## 2வது உலகப்போரின் பின்னர் மிக மோசமான அகதிப் பிரச்சினை

(ஹங்கேரி)

**பாரிய எண்ணிக்கையிலான அகதிகள் செர்பியாவில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடான ஹங்கேரிக்கு படையெடுத்துள்ளனர். ஹங்கேரி தனது எல்லையில் முட்கம்பி வேலி கட்டும் நடவடிக்கையை இன்னும் ஒரு சில தினங்களில் பூர்த்தியாக்கவுள்ள நிலையிலேயே அங்கு அகதிகளின் வருகை அதிகரித்துள்ளது.**



தஞ்சம் கோரி வரும் 2,093 அகதிகள் ஹங்கேரி நகரான ரஷ்கேவுக்கு அருகால் எல்லையை கடந்துள்ளதாக பொலிஸ் அறிவிப் பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மசிடோனிய எல்லையில் ஒரு சில தினங்களுக்கு முன்னர் தடுக்கப்பட்ட சுமார் 7,000 தஞ்சக் கோரிக்கையாளர்களின் ஒரு பகுதியினரே இவ்வாறு ஹங்கேரியை சென்றடைந்துள்ளனர். மசிடோனியா அவசர நிலையை பிரகடனப்படுத்தி தனது கிரீஸ் நாட்டு எல்லையை மூடியதை அடுத்து அங்கு ஆயிரக்கணக்கான தஞ்சக் கோரிக்கையாளர்கள் நிர்க்கதியாகினர். எனினும் இவர்கள் பின்னர் எல்லையை கடக்க அனுமதிக்கப்பட்டனர்.


இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் ஐரோப்பா மிக மோசமான அகதி பிரச்சினையை சந்தித்து வருகிறது.

கிரீஸில் இருந்த மசிடோனியா எல்லையைக் கடந்த இந்த அகதிகள் செர்பியா ஊடாக ஹங்கேரியை சென்றடைந்துள்ளனர்.

"மசிடோனியாவில் நாம் இரண்டு தினங்கள் தடுக்கப்பட்டோம். அங்கு ஏற்பட்ட கலவரத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். கண்ணீர் புகைப்பிரயோகமும் மேற்கொண்டனர். ஒரு முதிய பெண் தாக்கப்பட்டு அவரது ஆவணங்கள் பறிக்கப்பட்டதை நான் கண்டேன்" என்று ஈராக் மொசூல் நகரைச் சேர்ந்த தஞ்சக் கோரிக்கையாளர் ஒருவர் விபரித்தார்.

2015 ஆம் ஆண்டு ஹங்கேரியில் ஒரு இலட்சம் தஞ்சக்கோரிக்கையாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டு முழுவதும் பதிவான எண்ணிக்கைக்கு சமனாகும். இதுவே 2012 ஆம் ஆண்டு அங்கு வெறும் 2000 பேரே பதிவாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## அகதிகள் தங்கவிருந்த இடத்திற்கு தீ வைப்பு



ஜேர்மனியில் அகதிகளின் தற்காலிக தங்குமிடமாக பயன்படுத்தப்படவிருந்த பாடசாலை உடற்பயிற்சி நிலையமொன்று, தீயிட்டு எரிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெர்லினுக்கு மேற்கே, 15 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள, நாவூன் பகுதியில் நடைபெற்ற இந்த தீ வைப்பு, வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்றாக இருக்கலாம் என தாம் நம்புவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் எவரும் காயமடையவில்லை. இந்த நகரில் குடியேறிகளின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தீவிர 'வலதுசாரிகளால் தொடர் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் எட்டு இலட்சம் பேர் வரையிலானோர், அகதி தஞ்சம் கோரலாம் என ஜேர்மனி எதிர்ப்பார்க்கிறது. பெரும்பாலான ஜேர்மானியர்கள் குடியேறிகளை வரவேற்றாலும், மக்களில் சிறுபகுதியினர் இதற்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர். (3-7)

## 8 ஆயிரம் சிரிய அகதிகளை வரவேற்கிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

நித்தமும் குண்டுச் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கும் சிரிய நாட்டைச் சேர்ந்த அகதிகள், அன்றாடம் அனுபவித்துவரும் துயரம் வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை. சொந்த நாடின்றி அலையும் இந்த அகதிகளின் துயரத்தைப் போக்கும் வகையில் இவர்களில் 15 ஆயிரம் பேரை குடியமர்த்தும்படி அமெரிக்காவிடம், ஐ.நா அகதிகள் முகவாண்மை பரிந்துரைத்துள்ளது.

இந்நிலையில், 2016 ஆம் ஆண்டிற்குள் 5 ஆயிரம் முதல் 8 அயிரம் சிரிய அகதிகள் அமெரிக்காவில் குடியமர்த்தப்படுவார்கள் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கான முதற்கட்டமாக இந்த வருட இறுதிக்குள் ஆயிரம் முதல் 2 ஆயிரம் வரையிலான அகதிகள் குடியமர்த்தப்பட இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (3-7)

## குடிபோதையில் துப்பாக்கிச்சூடு; பிரான்சில் 4 பேர் உயிரிழந்தனர்

வடக்கு பிரான்ஸ் பகுதியில் குடிபோதையில் இருந்த நபர் ஒருவர் திடீரென துப்பாக்கியால் சுட்டதில் பச்சிளம் குழந்தை உள்ளிட்ட 4 பேர் சம்பவ இடத்தில் உயிரிழுந்தனர்.

பிரான்சின் ராய் பகுதியில் அமைந்துள்ள முகாம் ஒன்றில் தான் இந்த கொடூரச் சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து பார்வையாளர்கள் தெரிவிக்கையில், குடிபோதையில் இருந்த அந்த நபருக்கும் முகாமில் இருந்தவர்களுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அது துப்பாக்கி சூட்டில் முடிவுக்கு வந்ததாக தெரிவித்தனர்.

இதில் பெண் ஒருவர், 6 மாத குழந்தை உள்ளிட்ட 4 பேர் உயிரிழுந்துள்ளனர், மேலும் துப்பாக்கியால் சுட்டவரும் படுகாயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து ஜனாதிபதி மற்றும் அமைச்சர் ஆகியோர் அதிர்ச்சியை தெரிவித்திருப்பதுடன், இழப்பு நேர்ந்த குடும்பத்தினருக்கு இரங்கலையும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு துவக்கத்தில் 3 தீவிரவாதிகளால் 17 பேர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பிறகு பிரான்சின் பல முக்கிய நகரங்களும் உச்சக்கட்ட எச்சரிக்கையில் இருந்து வருகின்றன.

சமீபத்தில் அதிவேக ரயிலில் அமெரிக்க சிறப்புப் படையினரால் முறியடிக்கப்பட்ட தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து ஜனாதிபதியால் நாட்டின் பாதுகாப்பு குறித்து முக்கிய ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (3-7)

## பாலஸ்தீன ஆயுத குழுக்கள் மோதல் அகதி முகாமில் 5 பேர் உயிரிழப்பு

(லெபனான்)

ல்பனானின் தெற்கு துறைமுக நகரான சிடோனில் உள்ள மிகப் பெரிய பாலஸ்தீன அகதி முகாமில் போட்டி ஆயுதக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் மோதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

அயின் அல் ஹில்வா அகதி முகாமின் வட பகுதியில் ஜிந்த் அல்ம் குழுவுக்கும் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பத்தாஹ் அமைப்பிற்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட மோதல் வேகமாக ஏனைய பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

இந்த மோத்லில் பத்தாஹ் தரப்பில் மூவர் கொல்லப்பட்டு பலரும் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன. மோதல் ஆரம்பமாவதற்கான காரணம் தெரியாத நிலையில் இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம் சுமத்துகின்றன.

இந்த போட்டி ஆயுதக் குழுக்கள் அண்மைய மாதங்களில் பல முறை சண்டையில் ஈடுபட்டுள்ளன. ஜிந்த் அல்ம் உறுப்பினர்களின் தாக்குதலில் கடந்த சனிக்கிழமை இருபத்தாறு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் வாழும் அயின் அல் ஹில்வா முகாமிற்குள் லெபனான் இராணுவம் நுழைய அனுமதி இல்லை. 1975-90 சிவில் யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட உடன்பாட்டில் இந்த முகாமின் பாதுகாப்பு பாலஸ்தீன ஆயுதக் குழுக்களிடமே உள்ளது குறிப்பிடத்தக்கது (3-7)

## ரஷ்யப் பிரதமருக்கு ஜப்பான் கண்டனம்

(டோக்கியோ)

ரஷ்யப் பிரதமர் டிமிட்ரி மெத்வதேவ் கடந்த 22 ஆம் திகதி குரில் தீவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது ஜப்பான் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் உலகப்போரில் நேச நாடுகளிடம் ஜப்பான் சரணடைந்த சில தினங்களில், ஜப்பானின் வடக்குப் பகுதியில் உள்ள குரில் தீவுகளை ரஷ்யா ஆக்கிரமித்தது.

இத்தீவுக்கு, ஜப்பானும் உரிமை கொண்டாடுவதால், தீவு யாருக்கு சொந்தம் என்ற பிரச்சினை 70 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமலேயே உள்ளது. இந்நிலையில், டிமிட்ரியின் இப்பயணத்திற்கு, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர் (3-7)

## ஓரினச் சேர்க்கையாளர்கள் 7 பேருக்கு செனகலில் சிறை

(செனகலில்)

ஓரினச்சேர்க்கையாளர்கள் என்று குற்றங்காணப்பட்ட ஏழு பேருக்கு செனகல் நாட்டு நீதிமன்றம் தலா ஆறு மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

பொலிஸ் சுற்றிவளைப்பின் போது இவர்கள் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டிருந்ததாக தலைநகர் டகாரின் நீதிமன்றம் ஒன்றில் குற்றம்சாட்டப்பட்டது.

மேற்கு ஆபிரிக்க நாடான செனகலில் ஓரினச்சேர்க்கைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறை மற்றும் 2,500 டொலர் வரை அபராதம் விதிக்க சட்டத்தில் அனுமதி உள்ளது. 95 வீத முஸ்லிம்களைக் கொண்ட செனகலில் ஓரினச்சேர்க்கையாளர்கள் தமது அடையாளத்தை மறைத்து வாழ்கின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அண்மையில் கென்ய நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டபோது, ஆபிரிக்க நாடுகள் ஓரினச் சேர்க்கையாளர்களை சமமாக மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

ஆபிரிக்க பிராந்தியத்தில் 38 நாடுகளில் ஓரினச்சேர்க்கைக்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதோடு சூடான், மொரிதானியா, சோமாலியா மற்றும் நைஜீரிய நாடுகளில் மரண தண்டனைக்குரிய குற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஹிருணிகாவுக்கு எதிராக நான் வழக்குத்தொடர்வேன்

## கம்மன்பில கூறுகிறார்

(கொழும்பு)


தனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்ததாக கூறி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக மான நஷ்ட வழக்குத் தொடரப்போவதாக உதய கம்மன்பில எச்சரித்துள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில திருமணம் முடிப்பதாக ஏமாற்றி ஒரு யுவதியை சீரழித்திருப்பதாகவும், இரும்பு விற்பனை தொடர்பான முறைகேடு ஒன்றில் தொடர்பு இருப்பதாகவும் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றம் சாட்டியிருந்தார்.

இது பொய்யான குற்றச்சாட்டு என்று நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி விளக்கமளித்த கம்மன்பில, ஹிருணிகா பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டுமென்று சட்டத்தரணி நோட்டீஸ் அனுப்பியிருந்தார்.

எனினும் ஹிருணிகா அதற்கு இதுவரை பதில் அளிக்கவில்லை. இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக ஹிருணிகாவிற்கு எதிராக வழக்குத் தொடரப்போவதாக உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனக்கேற்பட்ட மானநஷ்டத்துக்கு ஈடாக ஹிருணிகா 500 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு தரவேண்டுமென்று நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




# மகிந்தவின் ஊடகப்பேச்சாளரிடம் துருவித்துருவி தீவிர விசாரணை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளரான ரொஹான் வெலிவிட்ட நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (எப்.சி.ஐ.டி) நேற்று முன்தினம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சீ.எஸ்.என். தனியார் விளையாட்டு தொலைக்காட்சி அலைவரிசை தொடர்பில் இடம் பெற்றதாக கூறப்படும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் இவரிடம் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.**

ரொஹான் வெலிவிட்ட கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது சீ.எஸ்.என்.தொலைக்காட்சி அலைவரிசையின் தலைவர்களில் ஒருவராக இருந்துள்ளமையும் இதன் போது இடம்பெற்றதாக முறையிடப்பட்டுள்ள நிதி மோசடி தொடர்பிலேயே இந்த விசாரணைகள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். அதன்படி நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு கொள்ளுப்பிட்டியில் உள்ள நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவுறுத்தலின் பிரகாரம் வருகை தந்த ரொஹான் வெலிவிட்டவிடம் பிற்பகல் ஒரு மணிவரை விசாரணைகள் இடம்பெற்றன. சுமார் 4 மணி நேர விசாரணைகளின் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்திய லங்காரவின் நேரடி கட்டுப்பாட்டில் சீ.எஸ்.என். விவகாரம் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் விசேட குழு இந்த விசாரணைகளை நடத்தியது. தேவை ஏற்படுமிடத்து மீண்டும் விசாரணைக்கு அழைப்பதாக குறிப்பிட்டே ரொஹான் வெலிவிட்ட விடுவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

**இலங்கையில் மோனோ ரயில் போக்குவரத்து**

# முதலீடு செய்வதற்கு மலேசியா ஆர்வம்!

இலங்கையில் மோனோ ரயில் போக்குவரத்து, துறைமுக அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, ஹோட்டல் நிர்மாணம் போன்ற துறையில் அபிவிருத்தி செய்யவும் முதலீடு செய்யவும் மலேசியா அதிக ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் வர்த்தகசபையுடன் மலேசிய பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர்.


ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மெகா பொலிஸ் எனப்படும் பாரிய நகர உருவாக்கம், மோனோ ரயில் போக்குவரத்து போன்ற கவர்ச்சிகரமான அபிவிருத்தித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்ய தற்போது மலேசிய முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அனைத்து நிதிக் கொடுக்கல் - வாங்கல்களையும் மலேசியாவின் எக்சிம் வங்கி ஊடாக மேற்கொள்ளவும் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் எதிர்வரும் நாட்களில் இலங்கையின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி இலகுவாக திரட்டிக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# தகுதியானவர்களைத் தெரிவு செய்வதில் மக்கள் தவறிழைத்துவிட்டனர்- அமரவீர



கடந்த தேர்தலில் தகுதியான வேட்பாளர்களை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்ய பொதுமக்கள் தவறியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

தகுதியான வேட்பாளர்களை தெரிவு செய்யுமாறு ஊடகங்களும், சிவில் அமைப்புகளும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களை பார்க்கும் போது, வாக்காளர்கள் புத்திசாலித்தனமாக வேட்பாளர்களை தெரிவு செய்தார்கள் என்று எண்ண முடியவில்லை.

குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியிருக்கும் பலர் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்படியானவர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மாத்திரமல்ல, ஐக்கிய தேசியக் கட்சியிலும் காண முடியும் எனவும் மகிந்த அமரவீர மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

**இம்மாதத்தில் இதுவரையில்**

# 16 போதைப்பொருள் வர்த்தகர்கள் கைது!

(கொழும்பு)

ஒகஸ்ட் மாதத்தில் 24 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 16 போதைப்பொருள் வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஆறு பேர் பெண்கள் என வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜகிரிய, ஒபேசேகரபுர, பண் டாரநாயக்கபுர, மாலிகாவ வீதி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 25 முதல் 50 வயது வரையிலானவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காலப்பகுதியில் ஒரு கோடி ரூபாவிற்கு அதிகமான பெறுமதியுடைய போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# தேசிய அரசாங்கம் குறித்து சு.கவுக்குள் கருத்து வேறுபாடு

**இருப்பது உண்மை என்கிறார் செயலாளர்**

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் சுதந்திரக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பது உண்மைதான் என்று அதன் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் சுதந்திரக் கட்சியினருக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு காரணமாகவே அமைச்சரவை நியமனம் பிற்போடப்பட்டுள்ளது.

எனினும் ஐ.தே.கவோ சுதந்திரக் கட்சியோ தேசிய அரசாங்கம் தொடர்பான கருத்து வேறுபாடுகள் குறித்து இதுவரை பகிரங்கமாக தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் கொழும்பில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுதந்திரக் கட்சி இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளது.

அதன் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க குறித்த கருத்து வேறுபாடுகள் தொடர்பான செய்திகளை உண்மை என்று ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனினும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டு டிலான் பெரேரா மற்றும் திலங்க சுமதிபால ஆகியோர் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தேசிய அரசாங்கத்துக்கான அனுமதியை வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் தொடர்ந்தும் ஐ.தே.கவுடன் பேசி இந்த விடயத்தில் இணக்கப்பாடு காணப்படும் என்று தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சம்பந்தனை எதிர்க்கட்சி தலைவராக்கி

# தமிழீழத்தை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சி சதி!

## கம்மன்பில கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக்கி சர்வதேச அந்தஸ்தை பெற்றுக் கொடுத்து தமிழீழத்தை ஏற்படுத்தும் திட்டத்தை ஐ.தே. கட்சி முன்னெடுப்பதாக குற்றம் சாட்டிய உதய கம்மன்பில எம்.பி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழிக்கும் "சதி" யின் ஒரு அங்கமே ஐ.தே. கட்சியின் தேசிய அரசுப் பொறியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற "மகிந்த" அணி ஆதரவாளர்களின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே உதய கம்மன்பில எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

1988 ஆம் ஆண்டு இந்தியா, இலங்கையை ஆக்கிரமித்தது. 2004 ஆம் ஆண்டில் "சுனாமி" பேரலையால் நாடும் மக்களும் நெருக்கடிக்குள்ளானார்கள். 2006 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ புலிகளை ஒழிக்கும் யுத்தத்தை ஆரம்பித்தார். இதன் போதெல்லாம் தேசிய அரசு தேவை, நாங்கள் இணைந்து செயற்படுவோம் என ஐ.தே. கட்சி கூறவில்லை.

ஆனால் இன்று எந்தவிதமான அவசரத் தேவையும் இல்லாத நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐ.தே. கட்சி தேசிய அரசு அமைக்கவுள்ளது. இதன் மூலம் சுதந்திரக் கட்சி மீதான மக்கள் நம்பிக்கையை சிதைத்து அக் கட்சியை அடுத்த தேர்தலுக்கு முன்னர் இல்லாதொழிக்கும் ஐ.தே. கட்சியின் சதித் திட்டமே இதுவாகும். அத்தோடு இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக்கவும், அதன் மூலம் சர்வதேச நாடுகளில் சம்பந்தனுக்கு இராஜதந்திர அந்தஸ்தை பெற்றுக் கொடுத்து உலக நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நேரடியாக நடத்தும் சந்தர்ப்பத்தை ஐ.தே. கட்சி ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிக்கின்றது.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் தனித் தமிழீழத்துக்கு மேற்குலக நாடுகளின் ஆதரவை சம்பந்தன் பெற்றுக் கொள்வார்.

இதுவே மேற்குலகினதும் ஐ.தே. கவினதும் நிகழ்ச்சி நிரலாகும். இன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கலைக்கப்படப் போவதாகவும் பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது.

இம்முன்னணியில் 95 எம்.பிக்கள் மற்றும் 300 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளனர். எனவே கலைப்பது இலகுவான காரியமல்ல. ஆனால இன்று இம் முன்னணியை செயலிழக்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் உதய கம்மன்பில எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

## அருள்நெறி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேறும் அறநெறி விழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடை பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வியாழக் கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி.பி. நாமகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதன்போது வரவேற்புரையினை அபிவிருத்தி உதவியாளர் திருமதி. நா. மாலதி நிகழ்த்தவுள்ளார்

கலை நிகழ்வுகளாக தொல்புரம் ஆதி முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை மாணவி ந.தட்சாயினி பேச்சு, மாவடி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களது வில்லிசை, முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை மாணவி ஆ.ஆதிரை தனி நடனம் மற்றும் குழுநடனம், ஒல்லுடை ஞான வைரவர் மாணவர்களது நாடகம், மாணவி நே.விலாணியின் தனிநடனம், சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை மாணவிகளான சே.ஜதுர்சனா, க.சாதுரியா, ச.தர்சனா ஆகியோரது பேச்சு, சிவகாமியம்மன் அற நெறிப் பாடசாலை மாணவர்களது நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் கொழும்பு, வெள்ளவத்தை, திவ்விய நாதலய மன்றம் வழங்கும் "நாதசந்தம்" எனும் குழு இசை நடைபெறவுள்ளது.

இதன்போது பாடலினை வ.வைவுஸி, கே.நிருஷா, உ.கஜனி, சி.சசிஸ்னோவிகா, ஆர்.சன்வித கானா, அ.ரக்ஷிதா, சி.சக்ஸஸன் ஆகியோர் பாடவுள்ளதுடன் வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம் -ச.பிரணவன், கடம் -அ.அமிர்தலோஜன் ஆகியோர் வாத்தியங்களை இசைக்கவுள்ளனர். (இ-5)

## மஹாகும்பாபிஷேக பெருவிழா இன்று

கோப்பாய் வடகோவை அருள்மிகு சாந்தி துர்க்கை அம்மன் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 9.30 மணி வரை நடைபெறவுள்ளது. இதன்போது இரவு 7.30 மணிக்கு "ஆலயங்களின் குடநீராட்டு" என்னும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி .அருளானந்தன் தெய்வீக பேருரை ஒன்றினையும் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

- - - - - - - -

சாவகச்சேரி -நுணாவில் கிழக்கு அருள்மிகு கற்குழி கந்தசுவாமி ஆலய மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.02 மணி தொடக்கம் 9.20 மணிவரையுள்ள வேளையில் நடைபெறவுள்ளது. இக்கும்பாபிஷேக பெருவிழாவில் "கும்பாபிஷேக மகத்துவம்" எனும் தலைப்பில் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீகப் பேருரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார். கும்பாபிஷேகத்தினையொட்டிய பூர்வாங்க கிரியைகள் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (இ-5)

## ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பிரசவ விடுமுறை மற்றும் விசேட விடுமுறைகளில் செல்லும்போது அதனால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்,வரலாறு,தமிழ் ஆகிய பிரதான பாடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற 60 தொடக்கம் 65 வயது வரையான ஆசிரியர்கள் மூலம் பதிலீட்டு நியமனம்செய்யதீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே விருப்பமுடைய ஓய்வு பெற்றவர்கள் தங்கள் விண்ணப்பங்களை வடமாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்க முடியும்.

பெயர், விபரங்கள் எமது அமைச்சில் பாட ரீதியாக பதிவு செய்யப்படும். வெற்றிடங்கள் வரும்போது விண்ணப்பிப்பதற்கு தகுதியான பாடசாலைகள் குறிப்பிட்டு கடிதம் வழங்கப்படும்.

எனவே தகுதியான ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தங்கள் பெயர், விபரங்களை தமக்கு அருகில் உள்ள வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பத்தினை பெற்று செப்டெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-5)






## வேலிருக்கு அஞ்சாதே மடமை நெஞ்சே

உத்தமனாம் வேல் முருகன் ஓங்கும் நல்ல
உயர்பதியாம் நல்லூரில் மயில்மீதேறி
பக்தியுடன் அடியவர்கள் சூழ்ந்தே நிற்கப்
பார்முழுவதும் தனதழகால் ஈர்த்து என்றும்
நித்தமொரு வடிவோடு நெஞ்சை அள்ளி
நேர் நின்று பொழிகின்ற அருளைக் கண்டார்
எத்திசையில் இருந்தாலும் ஓடிவந்து
ஏத்துவாரம் அவன்தாளில் இதம் வைத்தே

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

## அறு சீர் விருத்தம்

நல்லூரான் பெருமையினை நல்லடியார் பக்தியுடன்
நவிலக் கேட்கான்
வல்லபங்கள் பேசிடுவோர் வாயடைத்து நின்றிடுவர்
மௌனியாக
செல்லப்பர் முதலான சித்தகனச் செல்வர்கள்
சிரித்து உலாவி
நல்லமுதைப் பக்குவர்க்கு நன்றாக ஊட்டினரே
நல்லை மண்ணில்



சி.வெற்றிவேலு
வட்டுக்கோட்டை

## முருகா உன் திரு நாமங்களில்

சரவணபவனே வந்திடையா
சஞ்சலங்கள் தீர்த்திடையா
குறிஞ்சிக் குமரனே வந்திடையா
குறைகள் பல தீர்த்திடையா
வேலவனே வந்திடையா
வெவ்வினைகள் நீக்கிடையா

மிஷாந்தி செல்வராஜா
அரியாலையூர்

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்



தாமென்ற வாண வத்தில்
திழைத் திட்ட பிரமாவுக்கு
ஓமெனும் பிரணவத்தின்
உட்பொருள் விளக்கங் கேட்டு
நாமுள்ளோம் என்று காட்டி
நல்லதோர் பாடம் சொன்ன
வாமனன் மருகா வேலா
வந்தாள்வாய் நல்லைக் கந்தா

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX
வேறு எங்கும்
கிளைகள் இல்லை
சரவணா ரெக்ஸ்
இல. 526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன் கோவில் அருகில், யாழ்ப்பாணம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்தில் வன்முறை ஊரடங்கு சட்டம் அமுல்

(அகமதாபாத்)

**குஜராத்தில் படேல் சமூகத்தின் தலைவர் ஹர்தீக் படேல் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து இடம்பெற்ற தீவைப்பு, கல்வீச்சு போன்ற வன்முறை சம்பவங்களையடுத்து வடக்கு குஜராத்தில் நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று சூரத்தில் சிலபகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.**



குஜராத்தில் படேல் சமூகத்தினர் அம்மாநில மக்கள் தொகையில் சுமார் 12 சதவீதம் உள்ளனர். படேல் சமூகத்தினர் பாரதீய ஜனதா கட்சிக்கு மிகவும் விசுவாசமான ஆதரவாளர்களாக இருந்து வருகிறார்கள்.

அவர்கள், அதிக இடஒதுக்கீடு தரவேண்டும் என்று படேல் சமூகத்தினர் ஹர்தீக் படேல் என்ற 22 வயது இளைஞரின் தலைமையின் கீழ் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டத்தின் ஒரு பகுதியாக, நேற்று அகமதாபாத்தில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட மாபெரும் மாநாடு மற்றும் பேரணி நடத்தப்பட்டது. 48 மணிநேர உண்ணாவிரத போராட்டம் நடைபெறும் என்று ஹர்தீக் படேல் அறிவித்தார். இதற்கு பொலிஸார் அனுமதி வழங்க மறுத்து அவரை கைது செய்தது. இதற்கிடையே ஹர்தீக் படேல் கைதுசெய்யப்பட்ட சம்பவம் மாநிலம் முழுவதும் பரவியது. சூரத், மெக்சானா, ராஜ்காட் உட்பட பிற்பகுதிகளிலும் வன்முறை பரவியது. பின்னர் ஹர்தீக் படேல் விடுதலை செய்யப்பட்டார்.

வன்முறை சம்பவங்களை அடுத்து மாநில பொலிஸ் படை, துணை இராணுவப்படை அகமதாபாத் மற்றும் மெக்சானா நகரங்களில் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டது. வன்முறை சம்பவங்களில் ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்ததா, என்பது தொடர்பாக இதுவரையில் எந்த ஒரு தகவலும் வெளியாகவில்லை. அகமதாபாத்தில் பேருந்துகள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

குஜராத்தில் பல்வேறு பகுதிகளில் கற்கள் வீச்சு சம்பவம் நடைபெற்றது என்று மாநில பொலிஸ் கட்டுப்பாட்டு மையம் தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது. பொலிஸார் நிலையை கட்டுக்குள் கொண்டுவர தடியடி நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து வடக்கு குஜராத்தில் நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டது. இதேபோன்று மெக்சானா மற்றும் சூரத்தில் சிலபகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல படுத்தப்பட்டது. மெக்சானா மாவட்ட ஆட்சியர் லோசான் செக்ரா பேசுகையில், "மெக்சானாவில் வன்முறை ஏற்பட்டதை தொடர்ந்து, மெக்சானா, விஸ்நகர் உள்ளிட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது." என்று கூறினார். மேலும், நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர துணை இராணுவப்படைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். சூரத்திலும் இதே நிலை நீடிக்கிறது. அங்கும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வலியுறுத்தி மாநிலம் தழுவி போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'போராட்டத்தை அமைதியாக நடத்துமாறு தனது சமூகத்தினருக்கு ஹர்தீக் படேல் அழைப்பு விடுத்துள்ளார். (3-7)

## மக்கள் ஜனாதிபதிக்கு மக்களே அமைத்த சிலை!



தஞ்சை அருகே மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்கும் மக்களே அமைத்த சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் கடந்த மாதம் மறைந்தார். இதையடுத்து அவருக்கு நாட்டின் பல பகுதிகளில் சிலை உருவாக்கப்பட்டு நிறுவப்பட்டு வருகிறது. மக்கள் மனம் கவர்ந்த தலைவரான அவருக்கு, பல கிராமங்களில் மக்களே விரும்பி சிலை வடிவமைத்து, நிறுவி வருகின்றனர்.

அந்த வகையில் தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு அருகே கண்ணுகடி கிராமத்தில், அப்துல் கலாமுக்கு சிலை நிறுவ அந்த கிராம மக்கள் முடிவு செய்திருந்தனர். சிலை வடிவமைப்பு பணிகள் முடிவடைந்ததையடுத்து, நேற்று முன்தினம் சிலையின் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட திருச்சி புனித ஜோசப் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஜான் பிரிட்டோ, அப்துல் கலாமின் சிலையை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கிராம மக்கள், அப்துல் கலாமின் சிலைக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தினர். (3-7)

# இந்திய மக்கள் தொகையில் சுமார் 80 வீதம் இந்துக்கள்

இந்தியாவில் உள்ள மக்களின் மதரீதியிலான கணக்கெடுப்பு விபரங்கள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய மக்கள் தொகை ஆணையம் வெளியிட்டுள்ள இந்த தகவலின்படி, இந்தியாவில் அதிகபட்சமாக இஸ்லாமியர்களின் மக்கள் தொகை 24.6 சதவீதமும் இந்துக்களின் மக்கள்தொகை 16.8 சதவீதமும் வளர்ச்சிகண்டுள்ளது.

இந்தப் புள்ளிவிபரங்களின் படி இந்திய மக்கள் தொகையில் 79.8 சதவீதம் பேர் இந்துக்கள். 14.2 சதவீதம் பேர் முஸ்லிம்களாவர். இருந்தபோதும் இந்துக்களின் மக்கள்தொகை முந்தைய காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் 0.7 சதவிகிதம் குறைந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்து மக்களுக்கு அடுத்தபடியாக, சீக்கியர்களின் எண்ணிக்கை விகிதம் 0.2 என்ற அளவிலும் பௌத்தர்களின் எண்ணிக்கை 0.1 என்கிற அளவிலும் சரிந்துள்ளது என இந்த அறிக்கை கூறுகிறது.

கிறிஸ்தவர்கள் மற்றும் ஜைன மக களின் தொகையில் பெரிய அளவில் மாற்றங்கள் இல்லை.

இந்தியாவில் உள்ள 121.09 கோடி மக்கள் தொகையில், 96.63 கோடி பேர் இந்துக்களாவர். 17.22 கோடி பேர் இஸ்லாமியர்கள். கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2.78 கோடியாகும்.

இந்தியாவில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம், பௌத்தம், ஜைனம் என ஆறு மதங்களையே மக்கள் பெருமளவில் பின்பற்றுவதாக இந்தக் கணக்கீடுகள் கூறுகின்றன.

நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தேசிய அளவில் தொடங்கி, சிறிய நகரங்கள் வரையிலான மதரீதியிலான மக்கள் தொகை விபரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. (3-7)

# ஜேர்மனிக்குச் செல்கிறார் சுஷ்மா

(பெர்லின்)

இரண்டு நாள் அரசு முறையிலான பயணமாக ஜேர்மனியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எகிப்தில் இருந்து தலைநகர் பெர்லின் சென்றடைந்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஜேர்மனியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா - ஜேர்மனி இடையிலான பொருளாதார உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று அறிவித்ததற்கிணங்க ஜேர்மனியில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் சுஷ்மா சுவராஜ், ஜேர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் பிராங்க் வால்ட்டர் ஸ்டெய்ன் மியர் உட்பட அரசின் உயரதிகாரிகள் மற்றும் தலைவர்களை சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தியாவுடன் பெரிய அளவிலான வர்த்தகத் தொடர்புகளை வைத்துள்ள மிகப் பெரிய நாடான ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியத்தில் உலகளாவிய அளவில் பெரும் வர்த்தகத்தில் ஈடுபடும் பத்து நாடுகளின் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. இந்தியாவில் பெரிய முதலீடுகளை செய்துள்ள நாடுகளில் எட்டாம் இடத்தையும் ஜேர்மனி பிடித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் ஜேர்மனி செய்துள்ள நேரடி தொழில் முதலீடு 995.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இந்தியாவில் தற்போது ஆயிரத்து 600 இந்தோ-ஜேர்மனிய கூட்டு நிறுவனங்களும், சுமார் 600 கூட்டு திட்டங்களும் நடைமுறையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டில்மட்டும்ஜேர்மனுக்கு இந்தியா 7.03 யூரோக்கள் அளவிலான பொருட்களை ஏற்று மதி செய்துள்ளது என்ற நிலையில் ஜேரமனி அமைச்சருடனான சுஷ்மாவின் இந்த சந்திப்புக்குப் பிறகு இந்தியா-ஜேர்மனி இடையிலான பொருளாதார தொடர்புகள் மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3-7)

பாரதச் செய்தி

# சல்மான்கான் வழக்கில் ஆவணங்கள் மாயம்



(மும்பை)

மும்பை பாந்திராவில் கடந்த 2002 ஆம் ஆண்டு செப்டெம்பரில் நடிகர் சல்மான்கானின் கார் மோதி ஒருவர் பலியான வழக்கில், அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கடந்த மே மாதம் மும்பை செசன்சு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, அவர் மீதான தண்டனையை மும்பை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்தது. அவருக்கு பிணையும் அளித்தது.

இதனிடையே, சிறைத் தண்டனையை எதிர்த்து சல்மான்கான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றில் நீதிபதி ஏ.ஆர்.ஜோஷி முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது. அப்போது சல்மான்கான் தரப்பு சட்டத்தரணி அமித் தேசாய்க்கும், அரசு தரப்பு சட்டத்தரணிகளுக்கும் இடையே சூடான வாதம் அரங்கேறியது. இந்த நிலையில் திடீர் திருப்பமாக அமித் தேசாய் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், "இந்த வழக்கு தொடர்பாக அளிக்கப்பட்ட காகித புத்தகத்தில் முக்கிய ஆவணங்கள் இல்லை. அவை மாயமாகி இருக்கின்றன. அந்த ஆவணங்கள் இல்லாமல், மேற்கொண்டு வாதிட முடியாது" என்று குறிப்பிட்டிருந்தார். விபத்து நடந்தபோது சல்மான்கானின் பொலிஸ் மெய்க்காவலராக இருந்த ரவீந்திர பாட்டீலின் வாக்குமூல விபரமும் அந்த காகித புத்தகத்தில் இடம்பெறவில்லை.

எனவே, அந்த ஆவணம் இன்றி, ரவீந்திர பாட்டீல் அளித்த வாக்குமூலம் பொய்யானது என்பதை நிரூபிப்பது கடினம் என்றும் அமித் தேசாய் அந்த மனுவில் கூறியிருக்கிறார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி வழக்கை நேற்று வரை ஒத்திவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறந்து போனவனின் செருப்புகளுக்குக் காத்திருப்பவன் வெறுங்கால்களுடனே நடக்க வேண்டிவரும். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்களுக்கு எதிரான தமிழ் அரசியல் தலைமை

பாராளுமன்றத் தேர்தலின் போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக பிரசாரம் செய்யாததன் காரணமாக அவர் மீது கூட்டமைப்பு கடும் கோபம் கொண்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் மறுப்புத் தெரிவித்தது தொடர்பில் லண்டன் பி.பி.சி தமிழ் சேவைக்கு செவ்வி வழங்கிய இரா.சம்பந்தர், தேர்தல் முடிந்த பின் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றித் தீர்மானிப்போம் என்று கூறியிருந்தார்.

ஆக, வடக்கின் முதலமைச்சர் மீது நடவடிக்கை எடுத்து அவரை வீட்டுக்கு அனுப்புவதில் சிலர் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதை அறிய முடிகிறது.

இதேவேளை முதல்வரின் கதிரை மீது ஆசை கொண்டவர்களும் ஆலாய்ப் பறந்து திரிவதாகத் தகவல்கள் வெளிவருகின்றன. எதுவாயினும் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்தக் கட்சி முற்பட்டாலும் அதற்கு எதிராக வட பகுதித் தமிழ் மக்கள் கிளந்தெழுவர் என்பது நிறுதிட்டமான உண்மை.

வட மாகாண சபைத் தேர்தலில் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் போட்டியிட்டதனாலேயே அதிகூடிய விருப்பு வாக்குகளை அவரால் பெற முடிந்தது. எனவே எச் சந்தர்ப்பத்திலும் வட பகுதி மக்கள் நம்பி அளித்த வாக்குகளுக்கு வடக்கின் முதல்வர் நிச்சயம் மதிப்பளிப்பார் என்பதால்,

எந்தக் கொம்பர்கள் வந்தாலும் அவர்களை எதிர்கொண்டு, மக்களிடம் இருக்கக்கூடிய தனது செல்வாக்கை முதல்வர் நிரூபிக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் பேரவா.

இது ஒரு புறம் இருக்க,

இன்றைய சூழ்நிலை தமிழ் மக்களுக்கு மிகவும் பாதகமானது என்பது உணரப்படவேண்டும். வன்னிப் போரில் நடந்த இன அழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோருவதற்கு தமிழர் தரப்பில் எவருமில்லை.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஸா பிஸ்வால் இலங்கைக்கு வருகை தந்து அரசுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் சந்திப்பு நடத்திய போது,

சர்வதேச விசாரணை என்ற விடயம் முக்கியத்துவம் பெறாமல் இருந்ததை அவதானிக்க முடிகின்றது. இதில் இருந்து புதிய அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச விசாரணையை ஓரம் கட்டுவதற்கு உடன்பட்டுள்ளமை புலனாகிறது.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் தலைமையிலான தேசிய அரசைத் தமிழ் மக்கள் வரவேற்பதன் பின்னணி, முன்னைய அரசில் தமிழ் மக்களுக்கு நடந்த கொடூரத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதாலாகும்.

வன்னிப்போரில் தமிழர்களுக்கு நடந்த நிட்டூரத்திற்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் அதற்கான ஒரே வழி சர்வதேச விசாரணை ஆகும்.

எனவே சர்வதேச விசாரணையை நடத்தாமல் அதனைக் கிடப்பில் போடுவதற்கு யார் முயற்சித்தாலும் அவர்களை தமிழ் அன்னை ஒருபோதும் மன்னிக்க மாட்டாள்.

எதுவாயினும் சர்வதேச விசாரணை மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை என்பதன் மறு பக்கம் இலங்கைத் தமிழர்கள் அமெரிக்கா மீது கொண்ட நம்பிக்கையாகும்.

இழப்புகளைச் சந்தித்த ஓர் இனத்தின் நம்பிக்கையை, அந்த இனம் சார்ந்த அரசியல் தலைமை தூக்கி எறிந்தாலும் அமெரிக்கா நிச்சயம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் என்பது தமிழ் மக்களின் நம்பிக்கையாகும்.

# தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று இரதோற்சவம்

வழிபாட்டுப் பெருமைமிக்க துர்க்கை அம்பாளுக்கு தேர்விழா நடைபெறுகின்றது. 1965 ஆம் ஆண்டு துர்க்கை அம்பாளுக்கு ஆவணித் திருவோணத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1968 ஆம் ஆண்டு ஆவணி ஓணத்தை அந்தமாகக் கொண்டு கொடியேற்றம் நடைபெற திருவருள் பாலித்தது. ஆவணி உத்தராடத்தில் தேர் உற்சவமும் ஆவணி ஓணத்தில் தீர்த்த உற்சவமும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

மாவை ஆதீனகர்த்தா சு.துரைச்சாமிக் குருக்கள், மகாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகத்தைக் கண்ட துர்க்கை அம்பாளுக்கு 1968 இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. மஹோற்சவ ஒழுங்கு பற்றிய பத்ததியை அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்கள் மஹோற்சவத்தில் முதல் மூன்று நாட்களும் பிள்ளையாருக்குரிய யாகமும் பின்னுள்ள ஒன்பது நாட்களும் துர்க்கை அம்பாளுக்குரிய யாகமும் ஆக பத்ததி செய்தார்.

மஹோற்சவத்தின் சிறப்புக்களை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை, அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்கள், உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை, சைவப் பெரியார் சு.சிவபாத சுந்தரம், பண்டிதமணி சி.க.சிவத் தமிழ் செல்வி அம்மையார் போன்றவர்கள் நூல் எழுதியுள்ளனர்.

சிவத் தமிழ் செல்வி அம்மையாரின் நிதி நிர்வாகச் சிறப்புக்களால் பெரும் எழுச்சி பெற்ற இத்தலம் புலம்பெயர் அடியார்களின் அதிஉயர் வழிபாட்டுத்தலமாக இடம்பெற்றுள்ளது. அம்மையார் பசுக்களுக்கு பெருமதிப்புக் கொடுப்பவர். 1981 ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேகத்தின் பின்புதான் ஐந்துகாலப் பூசையுடன் திருவனந்தல் பூசை ஆரம்பமாகியது. திருவனந்தல் பூசைக்கு பசுப்பால் நைவேத்தியம் செய்வதற்காக பசுக்கள் வளர்க்கப்பட்டன. பசுக்களுக்காக மேற்படி கும்பாபிஷேகத்தின் போது மூலஸ்தானத்தில் இருந்த வெள்ளைக் கற்களைக் கொண்டு கோயிலின் தெற்கு வீதியில் ஒரு பசுமடம் அமைத்தார். அவற்றைப் பராமரிக்க பணியாளர்களை நியமித் தார் அம்மையார்.

கோயில்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் மஹோற்சவ கிரியைகள், வீடுகளில் நடைபெறும் சகல கிரியைகளுக்கு பசுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. 1992ஆம் ஆண்டு குண்டு வீச்சு அனர்த்த நிகழ்வின் பின்னர் கோயிலில் வளர்த்த பசுக்களை எல்லாம் உசல் கந்தசாமி கோவில் வரை வாகனங்களில் ஏற்றிச்சென்று காப்பாற்றியவர் சிவத்தமிழ் செல்வி அம்மையார். சிவத் தமிழ் செல்வி அம்மையாரின் வியத்தகு பணிகளில் உருவாகிய சித்திரத் தேரில் பவனி வரும் உலகத்து நாயகியான துர்க்கை அம்பாளை அடியார்களுக்கு திருவருள் பொழிய பிரார்த்தனை செய்வோமாக.

**கா.சிவபாலன்**

## செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் யோகா, கதக் நடன வகுப்புக்கள் யாழ்.இந்தியத் தூதரகத்தில்

(யாழ்ப்பாணம்)

இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து யோகா மற்றும் கதக் (வட இந்திய நடனக் கலை) வகுப்புக்கள் யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்தில் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் கலைத்துறையை வளர்ப்பதில் ஆர்வமாகவுள்ளோம்.

அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதர்கத்தில் சில காலம் யோகா வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. அவை தொடர்ச்சியாக நடைபெறவில்லை. எனவே எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இருந்து வாரத்தில் 3 நாட்கள் இந்த யோகா வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன.

அதேபோன்று வட இந்திய நடனக் கலைகளில் ஒன்றான கதக் நடனத்தையும் அறிமுகப்படுத்தவுள்ளோம். அந்த வகுப்புக்கள் வாரத்தில் 3 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும். கதக் நடனத்தை கற்பிப்பதற்கு கொழும்பில் இருந்து ஆசிரியர் ஒருவர் வருகை தரவுள்ளார்.

இந்த வகுப்புக்களுக்கான விண்ணப்ப படிவங்களை யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தில் பெற்றுக் கொள்வதோடு இது தொடர்பான மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இந்த வகுப்புக்களை முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு மாத்திரமே சான்றிதழ்கள் வழங்கப்படும். என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## "அன்பே சிவம்" விழிப்புணர்வு நாடகம்

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி ஆலய சப்பறத் திருவிழாவை முன்னிட்டு சைவ மகா சபையினரின் சுழிபுரம் சிவதொண்டர் அமைப்பினால் **அன்பே சிவம** எனும் தலைப்பில் ஆன்மிக மனிதநேய விழிப்புணர்வு நாடகம் இன்றைய தினம் மாலை 7 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் முதன்முறையாக அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.

சிவனடியார்கள், மனிதநேய ஆர்வலர்கள் இதில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு சைவ மகாசபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (செ-9)

## திருவெண்காட்டில் தெய்வீக உரை

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று இடம்பெறும் 8ஆம் திருவிழாவில், கானவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா தெய்வீக உரை ஆற்றவுள்ளார். இன்று இரவு 7 மணிக்கு இந் நிகழ்வு நடைபெறும். (ந)

## சத்திய தரிசனம்



### கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

❖ நம்மை வழிநடத்தும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரை அறிவது ஒன்றே கிடைப்பதற்கு அரிய இந்த மனிதப்பிறவியின் நோக்கம்.

❖ எறும்பு சுயநலமில்லாமல் தன் இனத்தோடு கூடி வாழ்கிறது. நாமும் ஒற்றுமைஉணர்வுடன் கூடி வாழ்ந்து கோடி நன்மை அடைவோம்.

❖ ஒரு பெரிய மரத்தையே கரையான் அரித்து விடுவது போல, தீயகுணத்தால் மனம் அடியோடு அழிந்து போகும்.

❖ நல்ல விஷயங்களை கேட்டால் மட்டும் போதாது. உண்ணும் உணவு ஜீரணமாகி உடலோடு கலப்பது போல, மனதால் நல்லதை உள்வாங்கி செயலிலும் காட்ட வேண்டும்.

❖ வாழ்க்கை நாணயம் போன்றது. இன்பம், துன்பம் இரண்டு பக்கங்களையும் அதில் யாராலும் தவிர்க்க முடியாது.

❖ மனிதன் சுயகட்டுப்பாட்டை இழந்து விட்டால், பண்பாடு சிதைந்து மிருகமாக மாறி விடுவான்.

❖ பெற்றோரை மதித்து நன்றி காட்டுங்கள். அவ்வாறு நன்றி காட்ட மறந்தால், வாழ்வு அர்த்தமற்றதாகி விடும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### இறைவழிபாட்டில் சந்தனத்தின் மூலமாக மனிதர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?


சந்தனத்தின் பயன்கள்: சந்தன எண்ணெய் உடம்பில் தோன்றும். உஷ்ண சம்பந்தமான நோய்களைத் தணிக்கும். சந்தனக்குழம்பு உடம்பில் உள்ள கோடைக்கட்டிகளை நீக்கும். மருதாணி, செம்பருத்தி, பொன்னாங்கண்ணி தைலங்களுடன் சந்தன எண்ணெய் சேர்த்து தலையில் தேய்த்தால் கபாலச்சூடு, கண்ரோகம், உஷ்ணநோய், கண்சிவத்தில் ஆகியவை உடனடியாக நீங்கிவிடும்.

அரைத்த சந்தனத்தை காலவிரயம் செய்யாமல் இறைவனுக்குச் சாற்றவேண்டும். காய்ந்த சந்தனம் பூஜைக்கு உகந்ததல்ல. மஞ்சள் சந்தனம் சிறப்பானதாகக் கருதப்படும். வெள்ளை கலந்த மஞ்சள், பழுப்பு நிறம், வெளிர் வெள்ளை, கருமை கலந்து பழுப்பு இவைகளையும் இறைவனுக்குச் சாற்றலாம். ஆனால் சிவப்பு கலந்த பழுப்புச் சந்தனம் தவிர்க்க வேண்டியது. சந்தனத்தை தானமாக பெருமாள் கோயிலுக்குக் கொடுத்தால் கடன் தீர்ந்து குடும்பத்தில் அமைதி ஏற்படும். முருகன் கோயிலுக்கு கொடுத்தால் பிரிந்தவர் கூடுவர், குழந்தை நோய்கள் தீரும். எல்லைக் கோயிலுக்குக் கொடுத்தால் பிரார்த்தனைகள் நிறைவேறும். சிவன் கோயில்களுக்குக் கொடுத்தால் அளவில்லா புகழ் கிடைக்கும். அம்பாள் கோயிலுக்குக் கொடுத்தால் நல்ல மனைவி கிடைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்கவும்!

## கபே அரசிடம் கோரிக்கை



**இலங்கை வரலாற்றில் மிகவும் பாரதூரமான அடக்குமுறையைக் கொண்ட சட்டமான பயங்கர வாத தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென கபே அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

இராஜகிரியவில் நேற்று நடை பெற்ற சிவில் செயற்பாட்டாளர் களுடனான சந்திப்பின்போது அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ஊடகவிய லாளர்கள் மற்றும் சிவில் செயற் பாட்டாளர்கள் பலரை இச்சட்டத் தைப் பயன்படுத்தி அடக்குமுறை க்குள்ளாக்கியமை குறிப்பிடத்தக் கது.

இச்சட்டமானது தனிநபர் சுதந்தி ரத்திற்கு மிகவும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என அவர் இதன் போது தெரிவித்தார்.

குறிப்பாக கால வரையறை யின்றி ஆட்களை தடுத்து வைக்க வும் இச்சட்டம் பயன்படுத்தப்பட்ட தாக அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

நாட்டில் தீவிரவாதம் ஒழிக்கப் பட்டு 6 வருடங்களுக்கு மேல் சென்ற நிலையில் இச்சட்டமானது தொடர்ந்தும் அமுலில் இருப்பதா னது நல்லாட்சியை உருவாக்குவ தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் இதன்போது தெரி வித்தார்.

இச்சட்டத்தை நீக்குவதற்கோ அல்லது அதன் பலத்தை குறைப் பதற்கோ தற்போதைய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்னகோன் தெரி வித்தார்.

தற்போது இலங்கையில் சிவில் சமூகத்தை வழிநடத்திச் செல்லக் கூடிய அரசாங்கமொன்று உருவாக் கப்பட்டுள்ளதனால், இவ்வாறான ஒடுக்குமுறை கொண்ட சட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்துவது, இந்நாட்டின் தனிநபர் சுதந்திரத்தை பாரியளவில் பாதிக்கும் எனவும், தற்போது எமது இந்நாட்டிற்கு எதி ராக விடுக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைப்போர், இவ்வாறான அடக்குமுறைகொண்ட, சட்டங் களும் விதிமுறைகளின் மீதே தங்களது கவனத்தைச் செலுத்துவ தாகவும் அவர் இதன்போது சுட்டி க்காட்டினார்.

இந்நாட்டில் மீண்டும் ஜன நாயகத்தை நிலைநிறுத்துவதற் கான நடவடிக்கையை செயல் ரீதியாக நிரூபிப்பதற்கான பொறு ப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாக வும், மிகவும் கொடூரமான இச் சட்டத்தை செயலிழக்கச் செய் வதன் மூலம் இப்பொறுப்பை வெளிப்படுத்த முடியும் என கீர் த்தி தென்னகோன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மனு ஒன்றை சமர்ப்பிக்க உதய கம்மன்பில ஆயத்தம்

பொதுத் தேர்தலின் போது ஏற்பட்ட சில சம்பவங்கள் தொடர் பாக போதுமான ஆதாரங்கள் கிடைக்கும் பட்சத்தில் தேர்தல் மனுவொன்றை சமர்ப்பிக்க எதிர் பார்த்துள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும் பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலே இதனைத் தெரிவித் துள்ளார்.


இதற்கிடையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன திஸாநாயக்க, மாத்தளை மாவட்ட கூட்டமைப்பு விருப்பு வாக்கு பட்டி யல் சீர்குலைக்கப்பட்டுள்ளதாக வும், அதற்கு எதிராக தாம் வழக் குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கீழ கேகாலை மாவட்டத்தில் போட்டி யிட்ட வேட்பாளரான ராஜிகா வக்கிரமசிங்கவும், விருப்பு வாக்கு தொடர்பாக கேள்வியெழுப்பி தேர் தல்கள் ஆணையாளருக்கு அண் மையில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்திருந்தமை குறிப்பிட த்தக்கது.

கேகாலை மாவட்டத்தில் சுதந் திர கூட்டமைப்பின் விருப்பு வாக்கு பெறுபேறுகள் ரகசியமான முறை யில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் விரைவில் விளக்கமறியலில்

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய வர்கள் வெகுவிரைவான காலப் பகுதியினுள் விளக்கமறியலுக்கு செல்ல நேரிடும் என ஐக்கிய தேசி யக் கட்சியில் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட வர்,

தேசியப் பட்டியல் ஊடாக நாடா ளுமன்றத்திற்கு தெரிவாகியவர் களில் பலருக்கு எதிராக குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தேசியப் பட்டியல் ஊடாக நாடா ளுமன்றத்திற்கு தெரிவாகியவர் கள் இரண்டு மூன்று வாரம் நாடா ளுமன்றில் செயற்படுவார்கள்.

அதற்கு பின்னர் வெலிக்கடை சிறைக்குச் சென்று தான் அவர் களை பார்க்க முடியும் என்பது எனக்கு மிகவும் உறுதியாக தெரி யும் என அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்க நான் தயார்



எதிர்க்கட்சித் தலைவர் பதவி தனக்கு வழங்கப்படும் என்றால் அதனை ஏற்றுக்கொள்ள தயார் என களுத்துறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு தகுதியானவர் என அவர் தெரிவித்தார்.

கடந்த 33 வருடங்களாக நாடா ளுமன்றில் செயற்படுகின்ற தான் ஒரு போதிலும் கட்சியை மாற்றிய தில்லை என அவர் சுட்டிக்காட்டியுள் ளார். இம்முறை பொதுத் தேர்த லில் தனது மாவட்டத்தில் அதிக வாக்கு களைப் பெற்றுக்கொண்டு தனது மாவட்டத்தை வெற்றிபெற செய்தமையும் தான் என அவர் கூறியுள்ளார்.

எனவே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு விரும்புவதாக குமார் வெல்கம மேலும் தெரிவித்துள்ளமை சிங் கள ஊடகமொன்று செய்தி வெளி யிட்டுள்ளது. (இ-7)

# அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ள இரு தரப்பும் போராடுகின்றன-ஜே.வி.பி

அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ள இரு தரப்பும் போராடி வரு வதாக ஜே.வி.பி கட்சி தெரிவித்து ள்ளது.

ஜே.வி.பி கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் செய்தியா ளர் சந்திப்பில் இதனைத் தெரிவி த்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை தேசிய அரசாங்கமாக கருத முடி யாது, அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்வதற்காக உருவா க்கப்பட்ட கூட்டு அரசாங்கமாகவே அடையாளப்படுத்த வேண்டும்.

தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டுமாயின் மக் களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமை யவே அதனை செய்ய வேண்டும்.

மக்களின் அபிலாசைகளுக் காக குரல் கொடுக்க வேண்டும்.

தோதலில் மக்கள் கூட்டு அரசா ங்கங்களை அமைக்க வாக்களிக்க வில்லை.

இந்த நடவடிக்கையானது மக் களின் ஆணையை உதைக்கும் வகையிலான செயற்பாடாகும். இவ் வாறு நடக்கும் என்பதனை முன கூட்டியே அறிந்து நாம் மக் களுக்கு சொல்லியிருந்தோம். நாம் எந்த வொரு கூட்டணியிலும் இணைந்து கொள்ளப் போவதில்லை.

நாடாளுமன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் நாம் சுயாதீனமாக இயங்க நடவடிக்கை எடுப்போம்.

நாட்டுக்கும் மக்களுக்கும விரோதமான, தீர்மானங்களை எடுக்க இந்த கூட்டணிகளுக்கு நாம் இடமளிக்கப் போவதில்லை என விஜித ஹேரத் மேலும் தெரி வித்துள்ளார். (இ-7)

# சரண குணவர்த்தனவின் விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்த்தவின் விளக்க மறியல் தண்டனையை கம்பஹா நீதிமன்றம் நீடித்துள்ளது.

அவரது வழக்கு நேற்று விசா ரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட தனை தொடர்ந்து கம்பஹா நீத வான் டிகிரி ஜயதிலக்க, இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

பொதுத்தேர்தலின் போது ஐக் கிய தேசியக்கட்சியின் உறுப்பினர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட் டின்பேரில் சரண குணவர்த்தன கைது செய்யப்பட்டார்.

ஏற்கனவே அவர் நீதிமன்ற த்தில் ஆஜர் செய்யப்படும் விளக்க மறியல் தண்டனை நீடிக்கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

மகிந்த ராஜபக்ஷவின் காலத் தில் சரண குணவர்த்தன ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பாரிய போராட்டங்களை முன்னெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கிண்ணியாவில் 12 கிலோ கஞ்சா வைத்திருந்தவர் விளக்கமறியலில்

12 கிலோ கஞ்சாவைக் தம்வசம் வைத்து கொண்டு சென்ற ஒரு வரை எதிர்வரும் 2ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கந்தளாயிலிருந்து தம்பலக மத்துக்கு 12 கிலோ கஞ்சாவை நேற்று முன்தினம் மோட்டார் கைக்கிளில் கொண்டு சென்ற போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிசாருக்கு ஒருவர் வழங் கிய தகவலின் அடிப்படையில் குறித்த நபரைக் கைது செய்துள்ள தாகவும் பொலிசார் தெரிவித்த னர்.

சந்தேக நபர் கிண்ணியா பிர தேசத்தைச் சேர்ந்தவர் என்பதோடு கஞ்சா விற்பனையிலும் ஈடுபட்டு வருவதாகவும் தம்பலகம பொலி சார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது கந்தளாய் நீதிமன்ற நீதிபதி ருவன் திஸா நாயக்க, அவரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட்டுள் ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் வாய்ப்புக்களில் மக்கள் பணியை தொடர்வேன்

## வல்லை ந.அனந்தராஜ் தெரிவிப்பு



கடந்த பொதுத் தேர்தலில் யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டதில் உங்களில்15 ஆயிரத்து 900 பேருடைய விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்கிறேன். கல்வித் துறையிலும், இலக்கியத் துறையிலும் ஈடுபட்டு அறிமுகமான நிலையில், இந்தத் தேர்தலின் மூலம் ஒரு வேட்பாளனாக அறிமுகமாகி, அரசியலுக்குப் புதியவனான என்மீது நம்பிக்கை கொண்டு வாக்களித்த மக்களுக்கு சிரம் தாழ்த்தி நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தேர்தலினூடாக, பாராளுமன்றம் செல்லக் கிடைத்திருந்தால் அது என்னை ஒரு தூரநோக்கு சிந்தனையுடைய சேவையாளனாக திறந்த வெளி அரங்கில் இறக்கி விட்டிருக்கும் ஆனாலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எனக்குக் கிடைக்க விருக்கும் சந்தர்ப்பங்களினூடாகத் தொடர்ந்தும் மக்களுக்கான சேவையை ஆற்றிக் கொண்டே இருப்பேன்.

எனது தேர்தல் பரப்புரைகளின் பொழுது தெரிவித்தவாறாக, கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் தமது சொந்த நிலங்களில் இருந்தும் துரத்தியடிக்கப்பட்ட எமது மக்களின் மீள்குடியேற்றம், தமிழ் மக்களின் விடிவுக்காகக் களத்தில் நின்று போராடி, இன்று தமது வளமான வாழ்வை இழந்து நிற்கும் போராளிகளின். வாழ்வாதார மேம்பாடு, கடற்றொழில் விவசாய, பனம்பொருள் உற்பத்தியாளர்களின் பொருளாதார மேம்பாடு, போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் குழந்தைகளின் வாழ்வாதார மேம்பாடு, கல்வி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு விருத்தி ஆகியவற்றின் உன்னதமான வளர்ச்சியினூடாக, உலகின் நவீன நகரங்களுக்கு ஈடான அபிவிருத்தியை எமது பிரதேசங்களிலும் ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினூடாக முன்னெடுக்கும் பொழுது அவற்றை நடைமுறைப் படுத்துவதில் தூணாக நின்று செயற்படுவேன்.

அதேவேளை தமிழ் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்ற கொள்கைகளை அடித்தள மாகக் கொண்டு தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்து தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளைக் கொண்ட ஒரே கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே விளங்குகின்றது என்பதை உலகுக்கு வெளிப்படுத்திய அன்பு உறவுகள் அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அனந்தராஜ் தெரிவித்துள்ளார். (செ-11)

## மங்கள சமரவீரவுக்கு நாமல் வாழ்த்து

வெளிவிவகார அமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்ட மங்கள சமரவீரவுக்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மங்களவுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் தனது டுவிட்டர் பக்கத்தில் நாமல் ராஜபக்ஷ பதிவேற்றம் ஒன்று செய்துள்ளார்.

"மீண்டும் ஒரு முறை வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்ட மங்கள சமரவீரவுக்கு வாழ்த்துக்கள்" என நாமல் ராஜபக்ஷ அதில் குறிப்பிட்டிருந்தார். (செ-12)

# மாகாண சபை உறுப்பினர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

மாகாண சபைகளில் காலியாகவுள்ள உறுப்பினர்களுக்கான வெற்றிடங்கள் அடுத்த வாரமளவில் நிரப்பப்படவுள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர, ஊவா முதலமைச்சர் ஹரின் பெர்ணான்டோ ஆகியோர் உள்ளிட்ட 52 மாகாண சபை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண அடிப்படையில் மேல் மாகாண சபையிலிருந்து 13 பேர், சப்ரகமுவவில் இருந்து 7 பேரும், வடமேல் மாகாண சபையிலிருந்து 6 பேரும், ஊவாவிலிருந்து 6 பேரும், தென்மாகாண சபையிலிருந்து.5 பேரும், கிழக்கு மாகாண சபையிலிருந்து 5 பேரும், வட மத்திய மாகாண சபையிலிருந்து 2 பேரும், நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் வாரம நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவியேற்கவுள்ளனர். அதன் பின்னர் மாகாண சபைகளில் காலியாகும் உறுப்பினர் வெற்றிடங்களுக்கு பட்டியலில் அடுத்தபடியாக கூடுதல் விருப்பு வாக்குகளை பெற்றுக் கொண்டவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (செ-12)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்யவேண்டும்

## கபே அமைப்பு கோரிக்கை

அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று கபே என்ற நியாயமான தேர்தலுக்கான இயக்கம் கோரியுள்ளது.

முன்னைய அரசாங்கம் இந்த சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ததாக கபேயின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டம் முன்னைய அரசாங்கத்தினால், மக்களின் சுதந்திரத்தை நசுக்கவே பயன்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் இந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர்களை கைது செய்யவும் குடியியல் உறுப்பினர்களை காலவரையறையில்லாமல் தடுத்து வைக்கவும் இந்த சட்டம் பயன்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். பயங்கரவாதம் நாட்டில் இருந்து 6 வருடங்களுக்கு முன்னர் ஒழிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் அமைதி சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றால் ஏன் இன்னமும் பயங்கரவாத சட்டத்தை அமுல் செய்ய வேண்டும் என்று தென்னக்கோன் கேள்வி எழுப்பினார்.(செ-12)

## நீதிமன்றத் தாக்...

எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்கை விசாரித்த நீதவான் 4 பேரை பிணையில் செல்ல அனுமதித்ததோடு ஏனைய 25 சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-9)


## தேசிய அரசில்...

வைச் சந்தித்து இந்த விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்த டக்ளஸ் தேவானந்தா தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்வது தொடர்பிலான தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் தனித்துப் போட்டியிட்ட ஈபிடிபி, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு ஆசனத்தை க்கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த.தே.கூட்டமைப்...

நதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ள இச்சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போரக்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நாமனித வுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கை குறித்து பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இது தொடர்பிலான பிரச்சினைகள தொடர்பில் இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அவர் வலியுறுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-12)

## நீதிமன்றத் தாக்...

மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற கட்டடத்தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 29 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்ற கட்டடத்தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டமை, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி அவர்களை காயப்படுத்தியமை, சிறைச்சாலை வாகனங்களை சேதப்படுத்தி பொதுச்சொத்துக்களுக்கு பங்கம் விளை வித்தமை மற்றும் சட்டவிரோத கூட்டங்களில் கலந்து கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர்களுக்கெதிராக வழக்குததாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்களுடைய வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு 23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அமைச்சரவை...

எடுக்கப்பட்டிருந்தது.

எனினும், தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பகிர்வதில் ஏற்பட்ட இழுபறிகளால் அது பிற்போடப்பட்டது.

அத்துடன், தேசிய அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சி அங்கம் வகிப்பது குறித்த பேச்சு வார்த்தையும் கடந்த சில் நாட்களாக இரு கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்றுவந்தது.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதற்கு நேற்று சுதந்திரக் கட்சியுடன் இணக்கம் எட்டப்பட்டுள்ள நிலையில், புதிய அமைச்சரவைக்கும் நாள் குறிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தில், நிதி உள்ளிட்ட முக்கிய அமைச்சுப் பதவிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-12)


**விற்பனைக்கு**

சுன்னாகம் முனியப்பர் கோவிலுக்கு முன்பாக கடையும், அலுமினிய அலுமாரியும் விற்பனைக்குண்டு. (1569)

தொடர்புகளுக்கு 0217905414



**CCTV**

துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

CCTV, Network Cabling
Copper Cabling & Wireless

100% தொழில் சார் செயன்முறை பயிற்சி நெறி



*Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
Next Batch : 28-Aug-2015 (C-1922)

iCS Study Overseas 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். 021- 4926222, 076-7013060


## மனித புதைகுழி உள்ள...

சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சபூர்தீன் உட்பட சட்டத்தரணிகளான எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, ஜெபநேசன் லோகு ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

இதன்போது குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது காணாமல் போன உறவுகள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் மன்றில் முன்வைக்கப்பட்டது.

விசேடமாக விசாரணைகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கான மாதிரிகளை தயாரித்தல், அதனை சரியான முறையில்கைமாற்றுதல்போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கும்,

அதன் பரிசோதனைகளை சர்வதேச ரீதியிலே அங்கீகரிக்கப்பட்ட தடயவியல், தொல்லியல் துறையினர் மற்றும் தடயவியல், மானுடவியல் தொடர்பான சிறப்பு நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு இவை அனுப்பி வைக்கப்பட வேண்டும் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளினால் மன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஏற்கெனவே குற்ற புலனாய்வு திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் அவர்களினால் அனுப்பி வைக்கப்படுவதாக கூறப்பட்ட பல்கலைக்கழகத்தின் பெயர் இதன் போது குறிப்பிடப்பட்டது.

ஆனால் அவ்வாறான ஒரு பல்கலைக்கழகம் அமெரிக்காவில் இல்லை என்பது தொடர்பில் சட்டத்தரணிகளினால் ஆட்சேபனை மன்றில் எழுப்பப்பட்டது.

இதனைத்தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட நீதவான், குறித்த மனித புதைகுழி காணப்பட்ட இடத்தில் கிணறு இருப்பதாக ஏற்கெனவே சட்டத்தரணிகளினால் மன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் குறித்த கிணற்றினை நேற்று மாலை அடையாளப்படுத்த மன்னார் பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நில அளவியல் திணைக்களம் ஆகியோருக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அதன் அடிப்படையில் நேற்று மாலை 3.30 மணியளவில் திருக்கேதீஸ்வரம், மாந்தை மனித புதைகுழி காணப்பட்ட இடத்துக்கு மன்னார் நீதவான் விஜயம் செய்தார்.

இதன்போது சட்டத்தரணிகளான வீ.எஸ்.நிரஞ்சன் மற்றும் ரணிதா ஞானராஜா ஆகியோரும், காணாமல் போனவர்களின் உறவினர்கள் சார்பாக மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சபூர்தீன் உட்பட சட்டத்தரணிகளான எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, ஜெபநேசன் லோகு ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதன் போது அங்கு உடைகள், மரங்கள் மற்றும் பற்றைகளுக்கு நடுவே சட்டத்தரணிகளினால் கூறப்படும் கிணறு உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிணற்றைச் சுற்றி காணப்படுகின்ற உடைகள், மரங்கள் மற்றும் பற்றைக்காடுகளை அகற்றி சுத்தப்படுத்தி மீண்டும் நாளை வெள்ளிக்கிழமை மாலை அவ்விடத்துக்கு விஜயம் செய்து கிணறு அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் அதனை தோண்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


**பதவி வெற்றிடங்கள்**

A/L எழுதியவர்களுக்கும், அடிப்படைத் தகைமை O/L உள்ளவர்களுக்கும்....

Innovage International (pvt)Ltd.

எமது நிறுவனத்தில் 06 நிரந்தர பதவிகளுக்கு 18 நபர்கள் இணைக்கப்படவுள்ளனர்.

- ★ அலுவலக உதவியாளர்
- ★ செயற்திட்ட அதிகாரி, விற்பனை பிரதிநிதிகள்
- ★ தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
- ★ வயதெல்லை 18-30

(C-1933)

தொடர்புகளுக்கு :- 0778794077/0777981471



**விற்பனைக்கு**

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வியாபாரக் கட்டிடத் தொகுதியில் முதலாம் மாடியில் 426 சதுர அடிப் பரப்பளவு கொண்ட (நீளம் 44' X அகலம் 12') முற்றிலும் தரை ஓடு பதிக்கப்பட்டு உள்ளக மலசல, குளியலறை மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் கொண்ட கடைத்தொகுதி விற்பனைக்குண்டு. அத்துடன் மாதாந்த மாநகர சபை வாடகையாக 12500/= + VAT & NBT மாதாந்தம் மாநகர சபைக்கு செலுத்தப்பட வேண்டும். 99 ஆண்டு குத்தகைக்கு அமைவாக: உரிமையாள்ருக்கு அவசர பண தேவை இருப்பதால் உடனடியாக தொடர்பு கொள்ளவும். (1591)

தொடர்புகளுக்கு :- 0768716793



CSE COLOMBO STOCK EXCHANGE

**பங்குச்சந்தை பற்றிய அடிப்படை அறிமுகம்**

**பங்குச்சந்தையில் எவ்வாறு முதலீடு செய்யலாம்? என்பதை**

அறிந்து கொள்வதற்கு, நாளை (28.08.2015) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பங்குப்பரிவர்த்தனை- யாழ் கிளை கேட்போர்கூடத்தில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுங்கள். (C-1932)

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 0777822014 / 2221455
147-2/3, கே.கே.எஸ் வீதி (சத்திரச்சந்தி) யாழ்ப்பாணம்.



**ஜீவக வாத தைலம்**
Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567
(C-1829)


## சாத்தியமற்றுப் போகும்...

இலங்கைக்கு இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு கொழும்பைச் வந்தடைந்த நிஷா தேசாய் பிஸ்வால், தனது பயணத்தின் முடிவில் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நிஷா தேசாய் பிஸ்வால் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் இடம் பெற்ற மனிதவுரிமை மீறல் விவகாரம் தொடர்பாக சர்வதேசசமூகத்துடன்ஏற்கெனவே கலந்துரை யாடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித வுரிமைகள் பற்றிய கரிசனைகளுக்கு இலங்கையின் புதிய அரசாங்கம் பதிலளிப்பதற்கு கால அவகாசத்தைக் வழங்க வேண்டிய தேவையுள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நம்பகத் தன்மையுள்ள உள்நாட்டு விசாரணை ஒன்றுக்கான முயற்சிகளை நாங்கள் ஆதரிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான தோல்வியடைந்த கடந்த கால முயற்சிகள் நினைவில் இருக்கிறது.

ஆகவேதான் நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதற்கு உள்ளக பொறிமுறைக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் என உணருகின்றோம் .

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் எதிர் வரும் கூட்டத்தொடரில் இலங்கை மீதான அறிக்கை முன்வைக்கப்பட்டாலும், இலங்கைக்குப் போதிய கால அவகாசம் வழங்கக் கோரும் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படும். இத்தீர் மானம் கருத்தொருமித்த தீர்மானமாக அமையும்.

இலங்கை மீதான ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கை வெளிவந்த பின்னர், இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி இத்தீர்மானம் வரையப்படவுள்ளது.

இலங்கையில் கடந்த ஜனவரி மாதமும், இந்த மாதமும் இலங்கையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் உள்நாட்டு விசாரணைகளின் மூலம் கரிசனைகளுக்கு தீர்வு காணப்படும் என்பதாக வாக்குறுதி அளித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தினேன். இது தொடர்பிலான பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதற்கு, இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு அவர்களிடம் வலியுறுத்தினேன் என நிஷா தேசாய் பிஸ்வால் மேலும தெரிவித்துள்ளார். (செ-12)

## ரயில் மோதி...

என்ற குடும்பஸ்தரே சம்பவ இடத்தில் உயிரிழந்தவராவார்.

மேற்படி விபத்து தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12,78)

## மூன்று மாத கால...

போவதாக மகிந்த அறிவித்திருந்த போதும், பின்னர் மக்களுக்காகவும், நாட்டின் நன்மை கருதியும் மீண்டும் அரசியலுக்குள் நுழைவதாக அறிவித்திருந்தார்.

எனினும் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அவரால் பெரும்பான்மை பலத்தை பெற் றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

இந்நிலையில், கடந்த காலத்தில் இவர் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் தற்போத பன்மடங்காக அதிகரித்துள்ளன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தாம் ஓய்வு பெற போவதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org